# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஏப்ரல் 2006 ஜீவியம் 11 மலர் 12**

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்



| | பக்கம் |
|---|---|
| *இம்மாதச் செய்தி* | 2 |
| *எங்கள் குடும்பம் II* | 3 |
| *லைப் டிவைன்* | 38 |
| *சாவித்ரி* | 46 |
| *யோகவாழ்க்கை விளக்கம் V* | 48 |
| *அஜெண்டா* | 52 |
| *கால் சென்டர்* | 54 |
| *லைப் டிவைன் - கருத்து* | 61 |
| *அன்பர் கடிதம்* | 63 |



❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்**
**யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

## ஜீவியத்தின் ஓசை

✡ **எல்லோர்க்கும் எல்லாம் உண்டு.**

✡ **பார்வை மாறினால் பழக்கமும் மாறும்.**

✡ **எதிரியின் ஏற்றம் எல்லோருடைய முன்னேற்றம்.**

**பெரிய கை நிறையும்.**

## இம்மாதச் செய்தி

**உதவி செய்யப்போனால் தவறாமல்**

**உபத்திரவம் வரும்.**



# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**கணவர்** - **கொஞ்சமாகக் கொடுத்து அதிகமாகப் பெற நினைப்பதே பிரச்சினைக்கு ஆரம்பம்;**

**தாயார்** - **பிறரைச் சந்தோஷப்படுத்தி தாம் சந்தோஷப்படும் மனமில்லை:**

- ✡ **வலியும், சந்தோஷமும் எதிரொலிபோன்றவை என்பதை நாமறியோம். ''மரியாதை வேண்டுமானால், மரியாதை கொடுத்து, மரியாதை வாங்கு" என்பது நடப்பின் வழக்கு. மரியாதை இல்லாத ஊரில் இந்த சொற்கள் கேட்கும். பண்பான ஊரில் கேட்கமுடியாத சொற்கள் இவை.**
    - ❀ **கண்ணாடி, எதிரொலி போன்றவை வலியும், சந்தோஷமும்என்ற ஞானமில்லாததால் ஏற்படும் குறை இது. மேலும்,**
        - ☆ **வலியைப் பிறருக்கு அளித்தால், தமக்கு சந்தோஷம் வரும் என்பது உண்மையில்லைஎன்பதுடன், இது சட்டத்திற்கு எதிரானதுஎனத் தெரிவதில்லை.**
        - ☆ **இதிலும் ஒரு தத்துவம் உண்டு.**

          **நாம் வலிஎன நினைப்பது, அடிமனத்திற்குச் சந்தோஷம்.**

          **நாம் பிறருக்கு வலி கொடுக்க நினைத்தால் அவர் மேல் மனம் வலிபடுகிறது. அவரது அடிமனம் சந்தோஷப் படுகிறது. அதற்கு நேரடியான பலன் நம் அடிமனம் பெறும் சந்தோஷம். அதாவது நம் மேல்மனத்திற்குரிய வலி.**
        - ☆ **வலி வலியைத் தரும்என்பதும்,**

வலி சந்தோஷம்என்பதும்,

வலியைக் கொடுத்து சந்தோஷம் பெறலாம்என்பதும்,

உண்மைஎன்று விளங்க மேல்மனம், அடிமனம் விளங்க வேண்டும்.

- ✧ மனிதன் எதை நினைத்தாலும், எதைச் செய்தாலும், எதை நினைத்து எதைச் செய்தாலும், முடிவாக நடப்பது இறைவன் திருவுள்ளமே.
- ✧ கோணல் வழி, சிக்கல் முடிச்சு, தாமதம் ஏற்படுவது அஞ்ஞானத்தால்.
- ✧ அஞ்ஞானம் ஞானமானால் கோணல் நேராகும், சிக்கல் அவிழும், காரியம் க்ஷணத்தில் முடியும்.

☆ உபநிஷதச் சட்டம் all in each, each in all, ஒருவர் அனைவரிலும், அனைவரும் ஒருவரிலும் உள்ளனர். ஆண்டவன் அனைவரிலும், அனைவரும் ஆண்டவனிலும் உள்ளனர்என்பது ஸ்ரீ அரவிந்தத்தின் அடிப்படை.

- ✧ இது புரிந்தால் அஞ்ஞானத்திற்கு வழியில்லை.
- ✧ மனிதன் இறைவன் திருவுள்ளத்தைத் தன் ஞானத்தின் மூலம் நிறைவேற்ற முயல்கிறான்.
- ✧ மனிதன் இறைவன் திருவுள்ளத்தை அவனுடைய ஞானத்தின்மூலம் நிறைவேற்ற முயன்றால்,
  - ➤ சிக்கல் அவிழ்ந்து,
  - ➤ தாமதம் விலகி, க்ஷணத்தில் காரியம் முடியும்.

தாயார் - உலகத்து இரகஸ்யம் ஒன்று இங்குண்டு. சிறியது பெரியதை விரும்பி நாடும். அவமானம் பொருட்டன்று. அவமானப்படுத்தினால் பெருமைப்படுவார்கள்:



- ✡ உலகத்து இரகஸ்யம் பெரியது. அதைக் கதையில் கண்டோம்.
- ✡ உலகம்என்பது ஜடஉலகம்.
- ✡ சூட்சுமஉலகம் அடுத்தது.
- ✡ அதற்குரிய இரகஸ்யம் வேறு.
- ✡ காரணலோகம் ஒன்றுண்டு.
- ✡ அதற்கும் இரகஸ்யம் உண்டு.
- ✡ எட்டு நிலைகள் - ஜடம்முதல் சத்வரை - ஒவ்வொன்றிற்கும் சட்டம் உண்டு. ஒவ்வொரு சட்டத்திற்கும் இரகஸ்யமுண்டு.
- ✡ சட்டம் தெரியாதவனுக்கு இரகஸ்யம் பயன்படாது.
- ✡ எட்டு நிலைகள், மூன்று லோகங்கள், சிருஷ்டி, பரிணாமம், இந்-நிலைகள் மாறுமிடங்கள், இவற்றிற்கு அதிகபட்சம், குறைந்தபட்சம் என ஏராளமான சந்திப்புகள் உண்டு.
  - ❀ ஒவ்வொரு நிலைக்கும், இடத்திற்கும் ஓர் இரகஸ்யம் உண்டு.

    அந்த எல்லா இரகஸ்யங்கட்கும் பொதுவாக Master Secret பெரிய இரகஸ்யம் உண்டு.
  - ❀ பெரியஇரகஸ்யம் தெரிய எல்லா இரகஸ்யங்களும் தெரிய வேண்டும்.
  - ❀ இரகஸ்யம் தெரிய சட்டம் தெரியவேண்டும்.
  - ❀ சட்டம் தெரிய விவரம் தெரியவேண்டும்.
  - ❀ விவரம் தெரிய அனுபவம் வேண்டும்.
  - ❀ அனுபவம் புறத்திற்குரியது.
  - ❀ அதற்கு நீண்டகாலம் தேவை.
  - ❀ அனுபவம் அகத்திற்கும் உரியது.
  - ❀ அகஅனுபவத்திற்குக் காலம் குறைவு.
  - ❀ குறைவுஎனில் ஒரு க்ஷணம்.

❀ புறத்தின் யுகம் அகத்தில் க்ஷணம்.

❀ புறம் அகமாக, மனம் உணர்வாகவேண்டும்.
ஜடம் சூட்சுமமாகவேண்டும்.
சூட்சுமம் காரணமானால் அகம் பூர்த்தியாகிறது.

❀ அகம் பூர்த்தியானால், அது புறத்தை உட்கொண்ட அகமாகும்.

❀ அங்கு ஜடம் சச்சிதானந்தமாகும்.
வாழ்வு சித்தாகும்.
சைத்தியப்புருஷன் ஆனந்தமாகும்.
மனம் சத்தியஜீவியமாகும்.

கணவர் - நீ சமர்ப்பணத்தைப்பற்றிப் பேசினால் எனக்குக் கொஞ்சம் புரிந்ததும் போய்விடும்:

✡ ஆசைக்கே அருகதையில்லாத மனிதனுக்கு ஆசையே வாராது. உற்பத்தி செய்யமுடியாது. அவனுக்கு ஆசை வந்தால் அது வினோதமாக, விபரீதமாக இருக்கும். முனிசிபல் எலக்ஷனில் ஓட்டுக் கேட்டால் SSLC படிக்கும் பையன் என்னை BA வரைக்கும் படிக்க வைக்கிறீர்களாஎனக் கேட்பதுபோலிருக்கும்.

✡ இலட்சியங்களைப் பலனுக்காக ஏற்றவர் இல்லாததைப் புரிந்து கொள்வார்கள்.

❀ முதலாளி தொழிலாளர் குடும்பம் அதிக வருமானம் பெற அவர்கள் மனைவிகள் செய்யக்கூடிய தொழில்கட்கு பாங்க்மூலம் உதவி செய்தால் 120 ரூபாய் சம்பளம் பெறுபவர் உபரிவருமானம் 40 ரூபாய்முதல் 100 ரூபாய்வரைப் பெறலாம்என முயற்சிஎடுத்த பொழுது தொழிலாளிகள் சம்பளத்தை ரூ.100 உயர்த்திக் கொடுக்கச்சொல்லி ஸ்டிரைக் செய்தனர்.



❀ அதிக வேலை செய்யும் தொழிலாளிக்கு அதிகச் சம்பளம் கொடுத்தால் அதே சம்பளத்தை அனைவருக்கும் வேண்டும்எனக் கேட்டார்கள்.

❀ மானேஜருக்கு இலாபத்தில் பங்கு தர நினைத்தால், கம்பனியைக் கொடுஎனக் கேட்டான்.

❀ 'கிட்ட வாஎன்றால், எட்டி மூஞ்சை நக்குவான்'என்பது ஆழ்ந்த உண்மை.

❀ சமர்ப்பணம்என்பது நாம் நம்மை சர்வமும் அன்னைக்கு அர்ப்பணம் செய்வது. நாம் கேட்டவற்றையெல்லாம் அன்னை தரவேண்டும்என சமர்ப்பணத்தைப் புரிந்துகொண்டவர் கணவர். அதனால் விபரமாகச் சமர்ப்பணத்தைப்பற்றிச் சொன்னால் முதலில் புரிந்துகொண்டதும் போய்விடும்.

❀ மனிதன் தான் செய்யவேண்டியதைமட்டும் செய்யக்கூடியவன் இல்லை. தன்னால் முடிந்தால், தவறாமல் எதையும் செய்வான்.

✰ கலவர நேரத்தில் யார், யார் எதைச் செய்கிறார்கள்எனப் பார்த்தால் மனிதச்சுபாவம் தெரியும்.

✰ 7, 8 அண்ணன், தம்பிகள் சொத்தை ஒருவர் நிர்வாகம் செய்தால் பாதிப்பேர் அத்தனையும் தம் சொத்துஎன நினைப்பர்; கால்வாசிப்பேர் மற்றவருக்கு உரிமையில்லை என்பர். பத்தில் ஒரு பங்கு பேரிடமிருந்து சொத்தை வாங்க முடியாது. தொட்டால் தொட்டனவெல்லாம் என்னுடையன என்பது மனிதன் பெற்ற சுபாவம். பார்த்தால் வேண்டும் என்பான். நினைத்துவிட்டால் நிரந்தரமாகக் கேட்பான்.

✰ இவர்கட்கு இலட்சியமில்லை, இலட்சியமான சமர்ப்பணம் இல்லை.

✰ அப்படிப்பட்டவர் அன்னையிடம் வந்து அனைத்தையும் பெற்று "நாங்கள் சொர்க்கத்திலிருக்கிறோம்"என்பர்.

✰ அவர்கட்கு சமர்ப்பண-விளக்கம் குழப்பம் தரும்.

✰ "நானிப்படிப் புரிந்துகொள்ளவில்லையே"என்பர்.

✰ அவர்கள் செயல், எண்ணம், அறிவு, அவர்கட்கு அன்னை செய்வதை நாம் கண்டால், அன்னை யார்எனப் புரியும்.

தாயார் - ...... ஒரு ஸ்தாபனத்தில் வேலைக்கு வந்தவர் சமர்ப்பணத்தால் அதன் உச்சிக்கு வருவதும், சரணாகதி-யால் அந்த ஸ்தாபனத்தையே தனக்குரியதாக்கிக் கொள்வதும் சமர்ப்பணம் பிரம்மத்தையும், பிரம்ம ஜனனத்தையும் வெளிப்படுத்துவது ஆகும்:

✡ ஸ்தாபனம் பெரியது, மனிதன் சிறியவன்.

✡ மனிதன் தானே ஸ்தாபனத்தை உற்பத்தி செய்தவன்என உணர்ந்தால், மனிதன் ஸ்தாபனத்தின் அளவுக்கு வளர்வான். அது Self-awareness.

✡ சமர்ப்பணம்என்றால் தனக்காகச் செய்யும் வேலையை ஸ்தாபனத்திற்-காகச் செய்வது.

✡ அது மனிதனுக்கு ஸ்தாபனத்தின் வலிமையைத் தரும்.

✡ சரணாகதி மனிதனைப் பெரியவனாகவும், ஸ்தாபனத்தைச் சிறியதாகவும் செய்யும்.

✡ பிரம்மம்என்பதை மனிதன் தன்னில் உணரலாம், ஸ்தாபனத்தில் உணரலாம்.

✡ தன்னில் பிரம்மத்தை உணர்ந்தால் தன் வலிமை பெருகும்.

✡ ஸ்தாபனத்தில் பிரம்மத்தை உணர்ந்தால் ஸ்தாபனம் பெருகும்.

✡ பிரம்மஜனனம்என்பது ஸ்தாபனம் தன் செயலில் பிரம்மத்தை வெளிப்படுத்துவதாகும். அப்பொழுது செயல்கள் சிறப்புப் பெறும், ஒன்று பத்தாகப் பெருகும். பெருகி, உயர்ந்து, உயிர்பெற்று, ஜீவனடைந்து, ஒவ்வொரு செயலும் ஸ்தாபனத்திற்குச் சமமாவதும், மேலும் உயர்ந்து உலகுக்குச் சமமாவதும் பிரம்மஜனனமாகும்.



✡ ஊழியர், ஸ்தாபனத்தலைவராவது finite, infiniteஆவது. இதன் process என்ன?

❀ ஊழியன் தன்னைப் பிரம்மமாக அறியவேண்டும்.

❀ ஸ்தாபனத்தைப் பிரம்மமாகக் காணவேண்டும்.

❀ தான் ஸ்தாபனத்தை அணுகும்பொழுது பிரம்மம் பிரம்மத்தை அணுகுவதுபோல் நடக்கவேண்டும்.

❀ இதில் குறைந்தபட்சம் a life of values பண்பான வாழ்வு.

அதிகபட்சம் எந்த நிமிஷமும் ஒரு adventureஆவது.

Adventureஐ மேற்கொள்ள values தடை.

Valuesக்கு அடிப்படை energy of Brahman.

அது ஒளியின் வேகத்தைக்கடந்தது.

நாம் நல்லது செய்யவேண்டும்என்ற நிலை மாறி, நாம் செய்வன எல்லாம் நல்லனஎன்ற நிலைக்கு வரவேண்டும்.

அது நடக்க நமக்குள்ள Spiritual determinants எல்லாம் - Truth, Goodness, Love, etc., - Self-existentஆக இருக்க வேண்டும்.

சாதாரண மொழியில் சொன்னால் "அவர் கையால் தப்பு நடக்காது" என மற்றவர் கூறவேண்டும். ''நாம் தப்புஎன அவர் செய்த காரியத்தை அறிந்தால், அது நல்லதாக முடிவதைக் காணலாம்" என்பது பொதுஅபிப்பிராயமாக வேண்டும்.

நம் நாட்டில் அதை - அதன் குறைந்தபட்சத்தை, அதன் வாழ்வின் வெளிப்பாட்டை - இராசிஎன்கிறோம்.

நாம் இராசியை உற்பத்தி செய்யவேண்டும்.

❀ நாம் செய்யும் எந்த வேலையும் அளவுகடந்து கூடிவரவேண்டும்.

எது செய்தாலும் கெட்டுப்போகக்கூடாது.

❀ கெட்டஇராசியுள்ளவர்க்கு வழியில்லையா? உண்டு.

✰ தன் இராசி கெட்டஇராசிஎன உணர்ந்து, அறிந்து, ஏற்று, திருவுருமாற முன்வந்து, சமர்ப்பணம்செய்து, அடக்கமாக நடந்து, அனைவரிடமும் நல்லபெயர் வாங்கவேண்டும்.

- ✰ அடக்கமும், நல்லபெயரும் வந்தால், காரியம் கெட்டுப் போவது குறையும்.
- ✰ அதன்பிறகு பிறருக்கு அவர்கள் செய்வது கூடிவரப் பிரார்த்திக்கவேண்டும்.
- ✰ அனைவருக்கும் கூடிவந்தாலும், சொந்தமாக அவர்கட்குக் கூடிவாராது. அது வரும்வரைக் காத்திருக்கவேண்டும்.
- ✰ அகந்தை தீமையானால் இராசி கெட்டதாகும்.
- ✰ தீமை அழிந்தால் கெடுவது நிற்கும்.
- ✰ அகந்தை அழிய நினைத்தால் கூடிவருவது ஆரம்பிக்கும்.
- ✰ கூடிவர ஆரம்பித்தால் கூடிவருவதன் அளவு, தரம் உயரப் பாடுபடவேண்டும்.
  - ❂ ஒவ்வொரு கட்டம் தாண்டும்பொழுதும் இதே சிரமங்கள் எழும்.
  - ❂ சிரமங்களைக்கடப்பது சிரமம்என்பது ஏற்கமுடியாதது.
  - ❂ சிரமங்களை வாய்ப்பாக ஏற்காமல் அவற்றைக்கடக்க முடியாது.
  - ❂ கடக்கமுடிந்தால், தொடர்ந்தும் கடக்கவேண்டும்.
  - ❂ இடையில் நிறுத்தினால் உள்ளதும் போகும்.
  - ❂ அது புரிந்தவுடன் "நாமிங்கு வந்திருக்கக்கூடாது"எனத் தோன்றும்.
  - ❂ அப்படித் தோன்றுவது இயல்பு. இயல்புக்கு இடமில்லை.
  - ❂ இது அன்னைக்குமட்டும் உரிய சட்டமில்லை. எல்லா முன்னேற்றங்களுக்கும் உரிய சட்டமாகும்.
  - ❂ விமானம் ஆகாயத்தில் பாதியில் பறக்கவேண்டாம்என நினைப்பது ஆபத்து.
  - ❂ அன்னையை அறிந்தபின் திருமணம் செய்யப் பிரியப் படுவது தலைகீழான போக்கு.



- ❂ நெடுநாள் நடனமாடியவர் நிறுத்தினால் உடல் பெருத்துப் போகும்.

  நடனம் நின்றவுடன் உடலுக்குப் போதிய பயிற்சியில்லை என்பதால் இயல்பாகப் பெருகும் சக்தியை தடித்து உடலாக ஏற்று மகிழும்.
- ❂ அரசியல்வாதி, பிரபலமானநடிகன், பெருஞ்செல்வம் பெற்றவர், பெரியஅளவில் வளர்ந்த கம்பனி, உயர்ந்து வரும் குடும்பம், பண்பு பெருகும் வீடு, ஆகிய எதுவும் பாதியில் நிறுத்தமுடியாது.
- ❂ நாம் அன்னையிடம் வந்ததே தவறுஎன நினைக்கும் அன்பர் குடும்பம் அவலமானது.
  - ➤ அவர்கள் பாதாளத்தில் வீழ்வதைத் தடுத்து நிறுத்துவதும் அருள்.
  - ➤ அன்னையைத் தீவிரமாக ஏற்றவர் ஆர்ப்பாட்டமாகக் கருமாதி செய்தால் உயிருக்கு ஆபத்து. அவர் தொடர்புகொள்பவர் உயிருக்கு ஆபத்து. ஆபத்தைத் தடுத்து நிறுத்துபவரை அந்த ஆபத்து அழிக்கும்.
  - ➤ இவை அன்னைக்குமட்டும் உரிய சட்டங்களன்று. அனைத்துக்கும் உரிய சட்டம். வாழ்வுக்குரிய சட்டங்கள். வரலாறு படித்தால் இவை விளங்கும்.

கணவர் - தலை சுற்றுகிறது:

- ✡ தாயார் பேசுவதைக் கேட்டவர் சமர்ப்பணம் தமக்கில்லை என்கிறார். வேண்டுமா, வேண்டாமாஎன்ற தொனியில் தாயார் பேசுவது கணவருக்குத் தலை சுற்றுகிறது.

❀ கணவர் விஷயமே தெரியாதவர், அன்னையை அறிய ஆவல் இல்லாதவர். பலன் தெரிகிறது, பலனுக்குப்பின்னால் உள்ள பொறுப்பைக் கேள்விப்பட்டால் தலை சுற்றுகிறது.

❀ தலை சுற்றுகிறது என்றால்என்ன?

தலை தாங்கமுடியாத பாரம் வந்தால் சுற்றும்.

கணவருக்கு எந்த பாரமும் வரவில்லை.

கம்பனி, பவர் பிராஜக்ட், அந்தஸ்து வந்துவிட்டது. அது சந்தோஷம்.

அவர் செய்த எந்தக் காரியத்தாலும் அவை வரவில்லை.

வந்ததை ஏற்கவேண்டிய பொறுப்பு பிடிக்கவில்லை.

திறமையில்லாமல் வந்ததால், பொறுப்பில்லாமல் ஏற்க நினைக்கிறார்.

பொறுப்பில்லாமல் ஏற்கமுடியாது, ஏற்றால் நிலைக்காதுஎன்ற செய்தி தலையைச் சுற்றுகிறது.

பெரும்பலன் வந்தபிறகும் அதற்குரிய பொறுப்பை மனிதன் ஏற்க மறுப்பான்.

அதுவே அவர் நிலை.

அதற்கு ஒரு வழியுண்டா?

எதற்கும் வழியுண்டு.

விருப்பமில்லாதவனுக்கு விருது தரும் வழியில்லை.

பொறுப்பை ஏற்கமுடியாதவனுக்கு, பொறுப்பை ஏற்கும் வழியுண்டு.

பொறுப்பைத் தட்டிக்கழித்துப் பலன்பெறும் வழியைத் தேட வேண்டாம்.

❀ அன்னை தரிசனம், தியானம், நல்ல நடைமுறை, நல்லெண்ணம், ஆகியவை நாமறிந்த வாழ்வைவிட உயர்ந்தவாழ்வு தரும். அது நம் நிலைக்குட்பட்ட உயர்வு. நம் நிலைக்குயர்ந்த அடுத்த



நிலைக்கு இவை நம்மை அழைத்துச்செல்லும்என்பது கனவு, கற்பனை.

கணவர், பிள்ளைகள் நிலை இதுவே.

தாயாருக்குத் தெளிவிருந்தாலும், அம்சமிருந்தாலும், மனநிலை அதுவே.

ஜின்னா மனம் மாறுவார்என மகாத்மா எதிர்பார்த்தார்.

கல்கத்தா ரௌடிகள் மனம் மாறலாம்.

நவகாளி முஸ்லீம் மனம் மாறலாம்.

அது மனிதனால் முடியாது, மகாத்மாவால் முடியும்.

இந்தியாவில் எல்லா முஸ்லீம்களும் மனம் மாறுவர்என்பதோ, ஜின்னா மனம் மாறுவார்என்பதோ காந்திஜியாலோ, சத்தியாகிரஹத்தாலோ முடியாது.

அது பாதாளம். பரமாத்மாவுக்கு அசையும். மகாத்மாவுக்கு அசையாது.

முறை பல இடங்களிலும் பகுதியாகப் பலிக்கும். முழுமையிடம் முறை பலிக்காது.

கணவர் சில்லரையாக இல்லாமல் பொறுப்பேற்றால் தலை சுற்றாது.

தாயார் – மேலிருந்தால் இரண்டும் (indulgence, enjoyment) ஆனந்தம். கீழிருந்தால் இரண்டும் அழிவு. நடுவிலிருந்தால் choice. Discipline கட்டுப்பாடுவேண்டும்:

✡ கோடு முக்கியம். கோட்டிற்கு மேலிருந்தால் கொள்ளை இன்பம். கோட்டிற்குக் கீழேயிருந்தால் துன்பம்.

✡ நாமுள்ள இடம் ஆனந்தமா, அழிவாஎன நிர்ணயிக்கும்.

✡ இதன் தத்துவம் மேலே ஞானமானது, கீழே அஞ்ஞானமாகிறது. Self-absorption தன்னைத் தன்னுள்ளே கிரகித்துக் கொள்ளும்தன்மை.

✡ இத்தத்துவத்தின் power சக்தி, உண்மை தெரியவேண்டுமானால்,

- ❀ இத்தத்துவத்தை நிதானமாக, மனம் விளக்கமாக, குறிப்பாக முழுவதும் மனத்துள் வாங்கிக்கொள்ளவேண்டும்.
- ❀ மனபாரம் அகன்று இலேசானால், மனம் ஏற்றதுஎனப் பொருள்.
- ❀ மனம் லேசானபின், இந்த சக்தியைக் காண ஆவல் எழும்வரை பொறுத்திருக்கவேண்டும்.
- ❀ ஆவல் பூர்த்தியாகி ஆர்வமாகும்.
- ❀ ஆர்வமானபின் மனம் செயலுக்குத் தயாராகிறது.
- ❀ நம்மிடம் உள்ள அழிவுக்குரிய பழக்கம் ஒன்றைக் - காப்பி சாப்பிடுவது, அரட்டை அடிப்பது, சோம்பேறியாக உட்கார்ந்து இருப்பது, கேலிசெய்து பிறரை அழவைப்பது - குறிப்பிட்டு சோதனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.
- ❀ இவற்றைச் செய்ய விரும்பும் நினைவும் அழிவுக்குரிய நினைவேயாகும்.
- ❀ நம் செயல் (அல்லது நினைவு) நமக்கு ஆசையாக இருக்கிறதா, அழிவை நம்மால் தவிர்க்கமுடியாமல் செய்கின்றோமாஎனப் பார்த்து ஆசையிருந்தால் சோதனையை ஆரம்பிக்கக்கூடாது. ஆசை போய் ''இது அழிவு''என்ற அறிவோ, தெளிவோ, உணர்வோ ஏற்படும்வரை நாம் காத்திருக்கவேண்டும்.
- ❀ மனம் அவ்வெண்ணத்தில் concentrate செய்தால் - அந்நினைவுடன் தியானத்திலிருந்தால் - அதைப் பலநாட்கள் மீண்டும் மீண்டும் செய்தால், அழிவில் பெறும் ஆனந்தம், ஆக்கலில் எழும் ஆனந்தமாவதைக் காணலாம். (உ.ம்.) சிக்கனமாகப் பெட்டியில் காசை எடுத்து வைப்பதிலிருந்த ஆசை தாராளமாகச் செலவுசெய்வதில் எழுவதைக் காணலாம்.
- ❀ பிறரைக் கேலிசெய்து பெற்ற ஆனந்தம், அவரைப் பாராட்டுவதில் வருவதைக் காணலாம்.



- ☆ கேலிசெய்தது மட்டமான மகிழ்ச்சி.
- ☆ பாராட்டுவது உயர்ந்தசந்தோஷம்எனவும் தெரியவரும்.
- ☆ நாமே முயன்று பெறும் திருவுருமாற்றம் இந்தச் சோதனை.

தாயார் - அனுபவிப்பதே வாழ்க்கை;
அனுபவிக்காமல் வாழ முடியாது;
பரம்பரையாக அனுபவிப்பது தவறுஎன்பது கருத்து.
கருத்து எதுவானாலும் நடப்பது அனுபவிப்பதே;
மீசை நரைத்தாலும், ஆசை நரைக்காதுஎன்பது பழமொழி;
The heart never grows old; it grows richer and sweeter;
ஸ்ரீ அரவிந்தம் அனுபவிப்பதை ஆமோதிக்கிறது;
அனுபவிப்பது நல்லதாக, உயர்ந்ததாக இருக்கவேண்டும்;
அதிகாரம் செய்வதற்கு அலாதிப் பிரியமுண்டு;
கொடுமைசெய்ய விரும்புகிறவர் ஏராளம்;
கேலி செய்வதில் எவரும் விலக்கில்லை;
அன்பாகப் பழகினால் அதிகாரத்தைவிடப் பிரியம் எழும்;
கனிவு இதயத்தைக் கொடுமையைவிட நிரப்பும்;
பாராட்டுவது கேலியைவிட ஆனந்தம் தரும். கெட்டதை விட்டு நல்லதற்கு மாறமுடியுமா என்பதே கேள்வி;
அனுபவித்தபடியிருக்கவேண்டும்என்பது ஸ்ரீ அரவிந்தம்:

✡ இறைவன் அனுபவிப்பதற்காக உலகை சிருஷ்டித்தான்; அவன் நாடியது ஆனந்தம்.

நாம் நாடவேண்டியது அதே ஆனந்தம் - பிரம்மஜனனத்தின் பிரம்மானந்தம்.

இறைவன் ஆனந்தம் முழுமையானது. எப்படிப் பார்த்தாலும் அது ஆனந்தம்.

நமக்கு எதுவும் இரட்டையாகத் தெரியும்.

ஆனந்தம் வலியாகத் தெரியும்.

அழிவும், ஆனந்தமும் நன்றாகத் தெரியும்.

அழிப்பதில் ஆனந்தம், ஆக்கலில் ஆனந்தம் தெரியும்.

கோட்டிற்கு மேலே வந்துவிட்டால் அழிவு போய் ஆக்கல் நிற்கும்.

✡ அனுபவிக்க ஏற்பட்டது சிருஷ்டி.

நல்லதைமட்டும் அனுபவிக்கவேண்டும்.

ஆண்டவன் அனுபவிப்பதுபோல் அனுபவிக்கவேண்டும்.

அப்படி அனுபவித்தால் ஜடம் ஆனந்தமாகும்.

✡ நமக்கு நம் உடல் ஜடம்.

உடல் வலிக்குப் பிரதானம்.

உடலே ஆனந்தமானால் வலிக்கு இடமில்லை.

மனம் உயர்ந்து சத்தியஜீவியமாக, மனத்தின் நோக்கம் மாறவேண்டும்.

மனிதன் இறைவனாக, வலி ஆனந்தமாகவேண்டும்.

- ❀ அழிவு, ஆக்கலாகவேண்டும்.
- ❀ நோக்கம் உயர்ந்ததாகவேண்டும்.
- ❀ இறைவன் வேண்டும்என நினைக்கவேண்டும்.
- ❀ சமர்ப்பணம் பூர்த்தியாகி சரணாகதியாகவேண்டும்.
- ❀ அர்த்தமற்ற பூஜ்யங்கள், அனந்தனின் குழந்தையாகவேண்டும்.
- ❀ பூவுலகம் சொர்க்கமாகவேண்டும்.
- ❀ பூமியின் யோகம் உள்ளத்தில் பூர்த்தியாகவேண்டும்.
- ❀ பூமியின் பூரணம் பூரணயோக சித்தி.

தாயார் - ...... நமக்கு அன்னை பார்ட்னராக வந்திருக்கிறார்.....

தாயார் - எங்கு அன்னை நேரடியாக வரமுடியவில்லையோ, அங்கு அடுத்தவர்மூலம் வருகிறார். தரித்திரம் அப்படி வருபவரைக் கொடுமைப்படுத்தும், தூற்றும், சந்தோஷப்படும், துரோகம் செய்யும்:



✡ அன்னை எங்குமிருக்கிறார். எல்லோரிடமும் நேரடியாக வருவார். நாம் காதால்மட்டும் கேட்கமுடியும். கண்ணால்மட்டும் பார்க்கமுடியும் என்பதால் காட்சி பார்வையாக வருகிறது. மனம் நேரடியாகப் பார்க்க முடியும் என்றாலும், அத்திறனை இழந்து, கண்ணால்மட்டும் பார்க்கிறது என்பதுபோல் நாம் அன்னையை நேரடியாகப் பெறமுடியும் என்றாலும், நமக்குப் பெற்றோர், ஊரார், உறவினர், நம்பிக்கைகள் இருப்பதால், அன்னை அவற்றின்மூலமே வருகிறார்.

✡ இக்குடும்பத்திற்கு அன்னை வர முடிவுசெய்தபின், அதற்குப் பார்ட்னரே கருவிஎன முடிவுசெய்து அவர்மூலம் வந்திருக்கிறார்.

✡ அன்னை அன்பர்களிடம் அப்படியே வருகிறார்.

✡ இதன் தத்துவம் உண்டா?

- ❀ ஞானம் அஞ்ஞானமானபின் அஞ்ஞானத்திலிருந்து ஞானத்தை மீட்க ஞானம் முன்வருகிறது.
- ❀ மறைந்து, மறந்த பிரம்மத்தை, மறைந்ததை நினைவுபடுத்த பிரம்மம் செயல்படுவது அருள்.
- ❀ மறந்த பிரம்மம் தானே தன்னை நினைவுபடுத்திக்கொள்ள முடியாது.
- ❀ அதனால் அருள்மூலம் பிரம்மம் நினைவுபடுத்துகிறது.
- ❀ மனிதன் அருளைக் கொடுமைப்படுத்துகிறான், தூற்றுகிறான், சந்தேகப்படுகிறான், துரோகம்செய்கிறான்.
- ❀ அவதாரப் புருஷர்களிலிருந்து, இன்ஷூரன்ஸ் ஏஜண்ட்வரை மனிதன் விரட்டியடிக்கிறான்.
- ❀ Mother Teresa சேவைசெய்ய வந்தால் கல்கத்தா நகரவாசிகள் அவரை ஊரைவிட்டு வெளியேற்ற முனைகின்றனர்.
- ❀ சேவையாக எந்த வேலை செய்தாலும் சந்தேகம் எழுகிறது.

- ❀ உலகப்போரைத் தடுக்க உலக இலட்சியவாதிகள் ஆரோவில்லில் குடியேறினால் "இந்த வெள்ளைக்காரர்கள் இங்கு எதற்காக வருகிறார்கள்?"என்று நம் மக்கள் சந்தேகப்படுகிறார்கள்.
- ❀ ஏசுவுக்கு அவர் சிஷ்யரே துரோகம் செய்தார்.
- ❀ புறத்தில் காண்பதை நாம் அகத்தில் கண்டால்,
  - ✰ தூற்றுபவனும், கொடுமைப்படுத்துபவனும், சந்தேகப்படுபவனும், துரோகம்செய்பவனும் உள்ளேயிருந்து குரல் கொடுப்பதைக் காணலாம்.
  - ✰ அவன் குரல் நிதர்சனம்.
  - ✰ அதைக் கேட்டு, அதனினின்றும் விலகி, அது மாற, அன்னை-யைச் சரணடைவது நம் திருவுருமாற்றத்திற்கு வழி செய்யும்.

The Life Divineஐ எப்படிப் படிக்கவேண்டுமோ, அப்படி வாழ்வையறியவேண்டும்என்று கொண்டு, இக்கதையை, அதன் நிகழ்ச்சிகளை ஆராய்வது முழுப்பலன் தரும்:

✡ நூலில் ஒரு பாராவைப் படித்தால் புரிகிறது. உதாரணமாக Matter ஜடம்என்ற அத்தியாயத்தில் முதல் பாராவைக் காண்போம். அதில் 7 வாக்கியங்களுள்ளன. அவை,

- ❀ வாழ்வு பேயில்லை, ஒரு சக்தியென்று முன் 4 அத்தியாயங்களில் கண்டோம்.
- ❀ இந்த வாழ்வு தெய்வீகமயமாகும் வாய்ப்புடையது.
- ❀ ஜீவியம் மனத்துள் நுழைந்து, விரிந்து, உயர்ந்து, வாழ்வாயிற்று.
- ❀ இதுவரை முன் 4 அத்தியாயங்களில் படித்த இவ்வாழ்வு பூரணம் பெறவேண்டுமானால், இதன் அஸ்திவாரமான ஜடம் புரிய வேண்டும்.



- ❀ மூளையைப் பெற்ற மனிதன் அதன் அறிவால் விலங்கை விட்டகன்று உயர்ந்தான்.
- ❀ விலங்கைக்கடக்க மூளை தேவைப்பட்டது. இனி மனிதன் தன்னையேகடந்து சத்தியஜீவனாக உடல் முழுவதும், ஒவ்வொரு செல்லிலும் உள்ள மனம் செயல்படவேண்டும். செல்லைக்கடந்து (Physical material substance) உடலின் மனமே செயல்பட்டால் தான் சத்தியஜீவன் பிறப்பான்.
- ❀ வாழ்வு உடலில் பூர்த்தியாவதை நாம் தேடாவிட்டால், சர்வமும் சச்சிதானந்தம்என்ற தத்துவம் மாறி மனிதன் சச்சிதானந்தத்தை நேரடியாகத் தேடிப்போய் மோட்சம்பெறுவான். அது திருவுள்ளம் இல்லை.

  மேற்சொன்ன கருத்துகள் புரியும். அது முதல் நிலை. படித்ததை மனமும், அறிவும் புரிந்துகொள்வது. நூலில் விசேஷம், சிறப்பு, சூட்சுமம், இரகஸ்யம் இங்கில்லை. இதன்பின் அடுக்கடுக்காக 4 நிலைகள் உள்ளன.

✡ இதன்பின்னுள்ள முதல்நிலை சூட்சுமத்தை insightமூலம் அறியலாம். அது தர்க்கத்திற்கு நியாயம்.

- ❀ "காயமே இது பொய்யடா, சேலை கட்டிய மாதரை நம்பாதே" என்ற பரம்பரைக்கு நேர்எதிராக "வாழ்வு பேயில்லை, காயம் பொய்யில்லை"என பகவான் கூறுகிறார்.
- ❀ எந்த வாழ்வைவிட்டு நாம் விலகி சன்யாசம் பெறவேண்டும் என்றனரோ, அந்த வாழ்வுக்கு தெய்வீக வாய்ப்புண்டுஎன்று கூறும்பொழுது மரபு தவறுஎன்பதுடன், மரபு சிறுபிள்ளைத்தனம் எனவும் ஆகிறது.
- ❀ பேயெனக் கூறப்பட்ட வாழ்வு சித்தின் (ஜீவியத்தின்) வளர்ந்த ரூபம் என்கிறார்.
- ❀ உதறித்தள்ளப்படவேண்டிய வாழ்வை உத்தமம்என விளக்குகிறார்.

- ❀ பொய்யானதுஎனப்பட்ட உடல் சத்தியஜீவனாகும்எனக் கூறி, மரபையும், 'மூளையே முடிவு'என்ற விஞ்ஞானியையும் மறுத்து 'ஜடம் சச்சிதானந்தம்'என்று பகவான் கூறுவதை அறிய சூட்சுமம் தேவை. அதன் தர்க்கம் மரபுடன் தம்மை ஒப்பிடுகிறது. விஞ்ஞானி கூறுவதைக் கருதுகிறது. This is a logical justification seen by the subtle intelligence சூட்சுமஅறிவு தர்க்கத்தின் சிறப்பை அறியும்.

- ✡ காயம் பொய்என்பது பொய். காயம் வாழ்வின் அடிப்படை. 'வாழ்வு ஜீவியம் மனத்தால் மலர்ந்த பூரணம்'என்ற ஆன்மீக உண்மையை அடுத்த கட்டத்தில் அறிவது ஆன்மீக நிறைவு தரும். It gives a spiritually full richness.
- ✡ நான்காம் நிலையில் பகவான் அறிவாலோ, சூட்சுமத்தாலோ, ஆன்மீக நிறைவாலோ இப்பாராவை எழுதவில்லை. It is a fact of His Supramental existence as an experience தாம் சத்தியஜீவியத்தை அடைந்து, ஜடத்தை அங்கிருந்து கண்ட உண்மையை எழுதியுள்ளார் என நாம் அறியும்பொழுது பகவான் பொன்மயமாக நமக்குக் காட்சி அளிக்கிறார்.
- ✡ The Life Divine 4 நிலைகளிலிருப்பதைப்போல் வாழ்வும், இக்கதையும் 4 நிலைகளில் உள்ளன:

1. கதையைக் கதையாகப் படிப்பது முதல்நிலை.
2. இரண்டாம் பாகம் விமர்சனத்தை அறிவது கதையின் சூட்சும ஞானம்.
3. கதையை நம் வாழ்வுடன்பொருத்திப் பெறுவது ஆன்மீகநிறைவு.
4. நாம் மனித வாழ்விலுள்ளோம். இக்கதை நம்மை அதன்மூலம் சத்தியஜீவியத்திற்கு அழைத்துப்போவதை அறிந்து தியானத்தில் இலயித்தால் பகவான் தங்கமயமாகக் காட்சியளிப்பார்.

- ✡ பொதுவாகக் கதையை அப்படி உணர்வதைப்போல் கதையில் உள்ள 100 நிகழ்ச்சிகளைத் தனித்தனியே விமர்சிப்பதை அறிந்து நம்



வாழ்வின் நிகழ்ச்சிகளையும், மனநிலைகளையும் ஆராய்ந்தால் சூட்சும ஞானம், ஆன்மீகநிறைவு, பொன்னொளி ஆகியவை விவரமாக எழும்.

- ✡ அது அகந்தை கரைய உதவும்.
- ✡ பழைய தவறுகள் மனக்கண்முன் வந்து கரையும்.
- ✡ நமது தாழ்ந்த ஜீவியம் குறிப்பிட்ட விஷயத்தில் உயர்ந்த ஜீவியம் ஆவதைக் காணலாம்.
- ✡ கதை நமக்குக் கட்டுரையாகி தத்துவம் பயிற்றுவிக்கும்.
- ✡ இதிகாசமாகி இகத்தைப் பரமாக்கும்.
- ✡ மனிதவாழ்வைத் தெய்வீகவாழ்வாக்கும்.
- ✡ அது நீண்ட, நெடிய பாதை.
- ✡ ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இருபிரிவுகளைக் காணலாம்.
- ✡ அங்கு நம் choice இஷ்டம் செயல்படும்.
- ✡ தொடர்ந்து நம் choice இஷ்டம் அன்னை பக்கமிருப்பது அவசியம்.
- ✡ அது எந்த நேரமும் நம் பக்கம் திரும்பும்.
- ✡ திரும்பினால் அதுவே முடிவு.
- ✡ முன்னேற மறுத்தால் உள்ளதும் போகும்.
- ✡ முன்வைத்த காலை உலகில் எவரும் பின்வைக்கமுடியாது.
- ✡ செயல்கள் அவற்றின் சிறப்பை உணர்த்துவதை சூட்சுமமாக அறிந்து, நிறைவாகப் பெற்று, பொன்னாகப் பூர்த்திசெய்வது நல்லது.
  - ❀ 1970வாக்கில் புதுவை அரசு, ஆசிரமப்பள்ளியிலிருந்து பிள்ளைகளை சுதந்திரதின விழாவுக்கு அழைத்தனர். பள்ளி நிர்வாகம் மறுத்தது.
  - ❀ இந்நிகழ்ச்சியை அன்பர் ஒருவரிடம் சாதகர் கூறியபொழுது அன்பர், "மறுக்க உரிமையில்லை, மறுத்தால் கைது செய்வார்கள்" என்றார். பிள்ளைகளை அனுப்பிவிட்டனர்.
  - ❀ மறுநாள் சர்க்கார் பள்ளிக்கு உத்தரவிட்டது. உத்தரவை மீறினால் கைதுசெய்வோம்என்றது.

- ❀ சாதகர் அன்பரிடம், "நீங்கள் சொல்லியது உண்மையாகிவிட்டது. எப்படிக் கூறினீர்கள்"என வியந்தார். அன்பர் சட்டம் புரிந்தவர்.
- ❀ சட்டம் புரியலாம்; சூட்சுமம் புரியவில்லை. அடுத்த சில ஆண்டுகளில் அன்பரின் நண்பர்மீது வாரண்ட் வந்தது. கைது செய்யவில்லை.
- ❀ பள்ளி நிர்வாகம் செய்வது சட்டப்படி சரியா என்பதைவிட, சூட்சுமம் என்ன சொல்கிறது, அதன்பின் ஆன்மீக நிறைவு உண்டா, அகந்தை நிறைவுபெறுகிறதா, பகவான் பொன்மயமாக அதன்பின் கொலுவிருக்கிறாராஎனக் காண்பது வாழ்வில் அறிவும், சூட்சுமமும், ஆன்மீகநிறைவும், பொன்மயமான பொலிவும் பெற உதவும்.

கணவர் - அன்னையை அறிவது அதிர்ஷ்டம், ஏற்பது அருள், போற்றுவது பேரருள்எனக் கூறலாம் போலிருக்கிறதே:

- ✡ நான் இதை அடிக்கடி எழுதுகிறேன்.

  இது புதியதில்லைஎன நினைக்கத் தோன்றும்.

  நமது அனுபவத்தில் பார்க்கும்பொழுது இன்று புதியதாக அறிவதுபோல் தோன்றும்.

  அறிவால் தெரிந்ததை அனுபவத்தால் அறிவது அதிர்ஷ்டம்.
- ✡ அறிவது ஆயிரம், ஏற்பது எதுவுமில்லைஎன்பது நமது போக்கு.

  அறிந்த ஒன்றை செயலில் ஏற்க முனைந்தால் அதிர்ஷ்டம், அருளாவது அனுபவமாக எழும்.
- ✡ நமக்கு - அன்பர்கட்கு - எது நடந்தாலும் தொடர்ந்து நடக்கும் என்ற பேரருள் உண்டுஎன்பதை நாம் பெற்றதைப் போற்றும்பொழுது தெரியும்.



- ✡ இன்ஷூரன்ஸ் உண்டுஎன்பதே தெரியாதவர், தெரிந்துகொள்வது அதிர்ஷ்டம்.
- ✡ இன்ஷூரன்ஸை அறிவது வேறு, ஏற்பது வேறு. ஏற்றால் ஆபத்து வரும் நேரம் விலகும், அது அருள்.
- ✡ ஒன்றுபட்டால் வாழலாம்என நாம் அறிவோம். இந்து, முஸ்லீம் பிரச்சினை வந்தபொழுது அதை ஏற்றிருந்தால் நாடு பிளவுபட்டு இருக்காது. ஏற்கவில்லை, அதனால் அதிர்ஷ்டம் தவறிவிட்டது.
- ✡ இன்று பிளவுபட்ட நாட்டுமக்கள், அல்லது தலைவர்கள் 'ஒற்றுமை உயர்வு'என்பதை மனதால் ஏற்றால் பிரிந்த நாடு சேரும்.
- ✡ அப்படிச் சேர்வது அருள்.
- ✡ அது இந்தியாவை ஜகத்குருவாக்கும்என பகவான் கூறியுள்ளார்.
- ✡ உலகம் இந்தியாவைக் குருவாகப் பெறுவது பேரருள்.
- ✡ அதிர்ஷ்டம், அருள், பேரருள், ஆகியவற்றை நம் அன்றாடச் செயல்-களில் காண முயல்வது வாழ்வை, யோகவாழ்வாக மாற்றுவதாகும்.
- ✡ திறமையிருந்து பலிப்பது அதிர்ஷ்டம்.
- ✡ பலித்தது தொடர்வது அருள்.
- ✡ தொடர்ந்தது, தொடர்ந்து உயர்ந்து, விரிந்து, நின்று நிலைப்பது பேரருள்.
- ✡ நமக்கு நடந்த நல்லவை எத்தனை?
- ✡ நடந்தது தொடர்ந்ததா?
- ✡ தொடர்ந்தது உயர்ந்து விரிந்ததா என அறிய முயல்வது ஆத்ம விசாரம்.
- ✡ ஆத்மவிசாரம், அதுவே விசாரம்.
- ✡ கணவர் ஏதும் அறியாதவர்.
- ✡ அவருக்கு இது மட்டுமன்று, எதுவும் தெரியாது. எதை அவர் அறிந்தாலும் நல்லதே.

தாயார் - நாம் செய்வது நமக்கே திரும்பிவருவது நாம் அறிவது இல்லை:

✡ வேண்டுமென்றே பிறருக்குச் செய்யும் தீங்கு தவறாமல் நமக்கு வரும் என்கிறார் அன்னை. தெரியாமல் செய்தாலும் வேலை, செயலுக்குரிய சட்டப்படி நமக்கு அது வரும். நாம் அதைக் கர்மம் என்போம்.

✡ "பிறர்என்பது நாமே"என்பது உபநிஷதம், சத்தியஜீவியம். அதனால் நாம் பிறருக்குச் செய்வதுஎன்பது நமக்கு நாமே செய்து கொள்வது ஆகும்.

✡ 1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ம் தேதி எந்தக் காரணமும் இன்றி "Direct Action Day" ஜின்னா நேரடியான போராட்டம் நடத்த முஸ்லீம்களை அழைத்தார். இந்து-முஸ்லீம் கலவரம் அதனால் ஆரம்பித்தது. '46 '47 '48இல் சுமார் 2 இலட்சம் பேர்கள் உயிர் இழந்தனர். ஒரு கோடி மக்கள் தங்கள் இருப்பிடத்தைவிட்டு இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் வந்தனர். உலக சரித்திரம் காணாத கொடுமை இது. இது நம் தலைவிதி. சுதந்திரத்திற்கான பலிஎன்று கூறுகிறோம்.

1939இல் ஹிட்லர் உலகை ஆள போர் தொடுத்தான். ஐரோப்பிய நாடுகளை விழுங்கினான். காங்கிரஸும், காந்திஜியும், நேருவும் நேசநாடுகளுக்கு முழுஅனுதாபம் தெரிவித்தனர். ஹிட்லரைக் கண்டித்தனர். 1942இல் ''வெள்ளையனே வெளியேறு''என்ற போராட்டத்தை மகாத்மா ஆரம்பித்தபொழுது காங்கிரஸ் அவரை ஆதரித்தது. இராஜாஜிமட்டும் எதிர்த்தார். பிரிட்டன் நமக்கு எதிரியானாலும் உலகைக் காக்க உயிருக்குப் போராடுகிறது. இந்த நேரம் முதுகில் குத்துவது துரோகம் (moral violence). இது அஹிம்சை இல்லை. தார்மீக ஹிம்சைஎனக் கூறி காங்கிரஸைவிட்டு வெளி-யேறினார்.



❀ 1942இல் காங்கிரஸ் பிரிட்டிஷாருக்குச் செய்ததின் நேரடி விளைவு 1946இல் ஜின்னா இந்துக்களுக்குச் செய்ததுஎன நாம் அறியவேண்டும்.

❀ வரலாறு காணாதவாறு அன்னியன் ''நான் ஜூன் 1948இல் போகிறேன்''என்று கூறியபின், அது அருளின் செயல்என நாட்டுத்தலைமை அறியவில்லை.

❀ பகவான் ஸ்ரீ அரவிந்தர் சூட்சுமஉலகில் செயல்பட்டு இரண்டாம் போரை வென்றார்.

❀ அரசியல் அவருக்கு உயிர்மூச்சுஎன்றாலும், தாம் அரசியலில் செயல்பட விரும்பினால் சூட்சுமமாகவே செயல்படுவார். 1917இல் தமக்கு இரஷ்யப்புரட்சியில் பங்குண்டுஎன்கிறார். முதல் உலகப் போரில் துருக்கியில் தாம் செய்ய விரும்பியதைத் தெளிவாகச் செய்ததாகக் கூறுகிறார். அயர்லாந்திலும் அப்படியே செயல்-பட்டார். 1942இல் கிரிப்ஸ் தூது வந்தபொழுது ''நாட்டை பிரிப்பதைத் தவிர்க்க இது நல்ல சந்தர்ப்பம்''என காங்கிரஸ் தலைமைக்குக் கடிதம் எழுதிச்சொன்னார். காங்கிரஸ் அவர் பேச்சைக் கேட்கும் நிலையிலில்லை. நாடு பிரிந்தது.

❀ பரிணாமம்என்பது ஜடத்துள் மறைந்துள்ளது வெளிப்படுவது. இல்லாதது வாராது. நாம் செய்யாதது நமக்கு வாராது. நாம் செய்தது வரத் தவறாது.

❀ இந்தக் குடும்பம் பெறும் பேறு - கம்பனி, பவர் பிராஜெக்ட் - எல்லாம் தாயார் மனதால் செலுத்தும் பக்தி, நம்பிக்கைக்கு உரியதுஎன்ற தெளிவு குடும்பத்தில் போதுமானதாக இல்லை. குடும்பம் தாயாருக்கு எதிராகச் செயல்படுகிறது. தாயார் சாதிப்பதைக் குடும்பம் தம் செயலால் அழிக்கிறது. ஒவ்வொரு முறையும் தாயார் தம் சமர்ப்பண முயற்சியால் அதைச் சரிசெய்ய வேண்டியிருக்கிறது.

❀ 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'என்ற பழமொழி வாழ்வின் சுபாவத்தைக் கூறுகிறது. அன்பர்கள் ஏன் வாழ்வு அப்படிச் செயல்படுகிறதுஎன அறிய முற்பட்டால் ஆன்மீக விவேகம் பெறுவர்.

✡ 'முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்' - ஏன்? எப்படி?

ஒரு செயலில் பல பகுதிகள் உள. ஒரு பகுதியைச் செய்தால், அடுத்த பகுதி காத்திருக்கும். சிருஷ்டியின் இரு பகுதிகள் ஜீவன், சக்தி. (அதை ஜீவியம், சக்திஎனவும் கூறலாம்). ஜீவன் - ஜீவியம் - சக்தி என்பது தத்துவம். பிரம்மம் ஜீவனாகிறது. ஜீவியம் அதனின்று எழுகிறது. சக்தி ஜீவியத்தின் பகுதி. உலகம் சக்தியாலானது. சக்தி காலம், இடத்தால் கட்டுண்டது. ஜீவனும், ஜீவியமும் காலத்தைக் கடந்தவை.

1. ஜீவனையோ, ஜீவியத்தையோ மனத்தால் பிரிக்கமுடியாது.
2. மனம் சக்தியைத் துண்டுசெய்யும்.

   மனமும், சக்தியும் காலத்திற்குட்பட்டவை.

   காலத்துள் காரியத்தைப் பகுதியாகவே செய்யமுடியும்.

   முழுமையாகச் செய்யமுடியாது.

   காலையில் எழுந்து ஆபீஸ்போக குளிக்கவேண்டும், சாப்பிட வேண்டும், டிரஸ் செய்யவேண்டும். ஒவ்வொன்றாகவே - பகுதியாக - செய்யமுடியும். க்ஷணத்தில் குளித்து, சாப்பிட்டு, டிரஸ் செய்து போவதில்லை.

   பகுதிக்குப்பின் பகுதியுண்டு.

   காலத்தைக்கடந்த இடத்தில் காரியம் முழுமையாக நடக்கும்.

   குசேலருக்குச் செல்வம் க்ஷணத்தில் வந்தது.

   அது காலத்துள் நடக்காது.

   பகுதியைப் பகுதி தொடர்வது செயலின்தன்மை, காலத்தின் குணம்.



   தமிழ்நாட்டில் பிறந்த குழந்தை தமிழ் பேசும், இந்தி பேசாது.

   தமிழ்நாட்டு மொழி தமிழ்.

   அங்கு பிறந்த குழந்தைக்கு அந்நாட்டு மொழி பேசுவது இயல்பு.

   பிறந்தது முற்பகல் செய்வது. பிற்பகல் விளைவது பேசுவது.

3. ஜீவியத்தில் நடப்பவை காலத்தைக்கடந்தவை.

   அவை முழுமையானவை.

   அங்குத் தொடரும் காலம் இல்லை.

   தொடரப் பகுதியில்லை.

   முற்பகல், பிற்பகல் காலத்திற்குரியன. அவை அங்கில்லை.

   பகலும், இரவும் அற்ற லோகம் ஜீவியம்.

   கிருஷ்ணன் அவல் சாப்பிட்டவுடன், குசேலருக்கு மாளிகை வருகிறது.

   அது உடனே நடக்கிறது.

   அது முழுமையான காரியம்.

   முடிந்த காரியம்என்பதால் தொடர எதுவுமில்லை.

   தொடரும் காரியம் எதைத் தொடர்கிறதோ அதற்கு குணம் உண்டு.

   அதைக் கர்மம்என்கிறோம்.

   காலம், கர்மம், இரண்டும் ஒரு நிலைக்குரியவை.

   காலத்தைக்கடந்தால் கர்மமில்லை.

✡ சாதனைக்குத் தேவையானது வலிமை. வலிமை கடுமையானது. நேர்மையான சாதனைக்கு வலிமை எப்படிப் பயன்படும்?

❀ நேரு இலட்சியவாதி, ஏழை பங்காளன், மக்கள் மனத்தில் மகுடமாக வீற்றிருப்பவர்.

❀ பட்டேல் கடுமையானவர், பணக்காரருடனிருப்பவர், ராஜாக்களை ஆதரிப்பவர்.

- ❀ நேருவுக்கு வலிமை போதாது. பட்டேல் இலட்சியம் பணத்தின் இலட்சியம்.
- ❀ 'இன்று இந்தியாஎன ஒன்றிருக்கிறதுஎனில் அது பட்டேலால் தான்'எனப் பிரசாத் கூறினார்.
- ❀ பட்டேலிடம் விட்டிருந்தால் காஷ்மீர் பிரச்சினை இருக்காது. பாகிஸ்தான் பிரிந்திருக்காது.
- ❀ 'அவர்களில் பட்டேல் ஒருவருக்குத்தான் வலிமையிருக்கிறது'என பகவான் கூறினார்.
- ❀ நாடு விடுதலை பெற்றது, பாகிஸ்தான் பிரிந்தது, சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைந்தன. காஷ்மீர் ஐ.நா.விலிருக்கிறது 50 வருஷங்களாக. இவை நடந்தவை. நாம் இந்த நிகழ்ச்சிகளிலிருந்து புரிந்துகொள்வது என்ன? நம் வாழ்வை அதன்மூலம் எப்படிச் செப்பனிடுவது? இக்கதையில் அக்கடுமையான முரண்பாடுகளை முன்னிருத்தவில்லைஎன்றாலும், அவை பின்னணியில் உள்ளதை எப்படி அறிவது?

✡ இந்திய சுதந்திரம்மூலம் நாம் அறிபவை:

- ❀ தர்மம்என்பது யுகதர்மம். அது வலிமையின் செயல். வலிமை சாதிக்கும்பொழுது அதர்மமாகத் தெரிவதை தர்மமாகப் போற்றி ஏற்பது ஸ்ரீ அரவிந்தம்.
- ❀ சுதந்திரம் போரால், போரின் வெற்றியால் வரவில்லை. சட்டப்பூர்வமாகச் சுதந்திரம் வந்தது. எனவே சட்டத்தை முழுவதும் பின்பற்றவேண்டும்என நேரு, மவுண்ட்பேட்டன் செய்தவை இன்று வரை தீராத பிரச்சினையாக இருக்கின்றன. சட்டத்தைப் பெரும்பாலும் பின்பற்றலாம், முழுவதும் பின்பற்ற முடியாது, கூடாதுஎன பட்டேல் செய்தவை உடனே பிரச்சினையைத் தீர்த்தன. இன்றுவரை அவை பிரச்சினையாகவில்லை.
- ❀ வலிமைக்குரிய தர்மம் சாதிப்பது.



அதை அதர்மமாகச் செய்யாமல் வலிமையின் தர்மத்திற்கேற்றவாறு செய்வது சரி. வலிமை குறைவாக உள்ள இடத்தில் முழுவதும் தர்மமாக நடக்க முயன்றால் காரியம் அரைகுறையாகும்.

55 கோடி பாகிஸ்தானுக்குத் தரவேண்டும்என்று காந்திஜி கூறியதை நேரு, பட்டேல் ஏற்றுக் கொடுத்ததால் காஷ்மீர் குறை.

காஷ்மீரைத் தீர்த்தால் 55 கோடி தருவேன்எனப் பட்டேல் கூறியது பிரச்சினையைத் தீர்த்திருக்கும்.

பிரிவினையை, காந்தியை எதிர்த்து ஏற்ற நேருவும், பட்டேலும், 55 கோடி கொடு என்றதை ஏற்றனர்.

- ✫ 55 கோடி கொடுக்க முடியும் - அதனால் ஏற்றனர்.
- ✫ பிரிவினையை மறுக்கமுடியாது - அதனால் மகாத்மாவை மறுத்தனர்.

- ✳ முடியும்என்றபொழுது ஏற்பது பிரச்சினையை உண்டு பண்ணும்.
- ✳ முடியாதபொழுது மறுப்பதுபோல் முடியும்என்றபொழுது மறுப்பது சமர்ப்பணத்திற்கீடான செயல்.
- ✳ நம் வாழ்வில் எதை மறுக்கிறோம், எதை ஏற்கிறோம், இரண்டையும் ஒரே சட்டப்படிச் செய்கிறோமா, இல்லையேல் செய்ய ஏற்கிறோமாஎன்பதே நாம் இந்தியச் சுதந்திரத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டியது.

❀ வேண்டியவர்களிடம் அவர்கள் குறைகளை ஏற்கிறோம். அதே குறைகளை வேண்டாதவரிடம் ஏற்பதில்லை. பிரச்சினை வேண்டாதவர்என்பதால் வருகிறது. இருவருக்கும் ஒரே சட்டம், நமக்குரிய தர்மம்.

- ✫ நம் தர்மம் சரியானால் செய்யும் காரியம் கூடிவரும்.

☆ கிருஷ்ணபரமாத்மா தர்மத்தை அதர்மத்தால் நிலை நிறுத்தினார்.

☆ அதர்மத்தை தர்மமாக (பாஸிட்டிவாக) உணர்வது அன்னை தர்மம்.

- பிள்ளை போதைமருந்து சாப்பிட ஹாஸ்டல் பணத்தைப் பயன்படுத்தினால், ஹாஸ்டலுக்கு நேராகப் பணம் கட்டலாம். அவனிடம் பணம் தாராமலிருக்கலாம். மறுக்க ஆசை எழுந்தால் அது தவறு.
- சண்டி செய்யும் குழந்தையை அடிக்கும்பொழுது அடிக்கப் பிரியப்படுவது நெகட்டிவ் மனப்பான்மை.
- போதைமருந்து சாப்பிடுகிறான்எனத் தெரிந்தும் மகனுக்குப் பணம் கொடுக்க ஆசைப்படுவது நெகட்டிவ்.
- விளையாட ஆசைப்படுபவனைக் கட்டாயப்படுத்திப் படிக்கவைப்பது பாஸிட்டிவ்.
- கொடுமை செய்யும் நாத்தனார் கொடுமையை ஏற்பது அன்னைசட்டம்என அறிந்து ஏற்பது பாஸிட்டிவ்.

  வீராப்பாகப் பட்டினி கிடப்பது நெகட்டிவ்.

  எதிர்க்க தைரியமில்லாமல் பயந்து அடங்குவது நெகட்டிவ்.
- பாஸிட்டிவ், நெகட்டிவ் தெரியாத நேரமேயில்லை.

  தெரிந்து பின்பற்றாத நேரமுண்டு.
- திருமணமானவுடன் மனைவியுடன் போய், பெற்றோரை மறப்பது தவறுஎனத் தெரியாதவரில்லை.
- பெற்றோர் மனப்பான்மை சரியில்லை, அவர்கட்கு சுயநலமான அதிகாரம் முக்கியமேதவிர பாசமில்லை என்பதால் அவர்களைவிட்டுப் போவதும் (பாஸிட்டிவ், நெகட்டிவ்) இரு காரணங்களாலும் இருக்கும்.



செயலன்று, நினைப்பு முக்கியம்.

- நமது வாழ்வில் பாஸிட்டிவ், நெகட்டிவ் இரண்டும் இருக்கும்.
- கதையில் தாயார் பையன் புதுடிரஸ் வாங்க ஆசைப்படுகிறார். வேண்டாம்எனக் கூறுகிறார். மனம் நெகட்டிவாகவும், சொல் பாஸிட்டிவாகமிருக்கிறது.

  முடிவில் மனம் ஜெயிக்கிறது.
- ஒரு நாளில் 10 காரியங்கள் செய்தால், அவற்றை இப்படிப் பரிசோதனை செய்தால், மனம் எந்த அளவில் தகராறு செய்கிறதோ நமக்கு அங்கு வேலையிருக்கிறது. கதையில் தாயாருக்கு ஏராளமாகப் பலித்தாலும் மனம் குடும்பத்திலும், சொல் அன்னையிடமும் உள்ள இடங்களில் பெரியவனுக்குச் சண்டை, சிறியவனுக்குக் கேலிஎனப் பிரச்சினைகள் வருகின்றன. இவற்றை நெருக்க நாமே எதிரி. இவற்றிற்கிடையே உள்ள இடைவெளியை விலக்குவது sincerity யோகம்.

  சுதந்திரம் வந்து 50 ஆண்டுகளாக உள்ள பிரச்சினைகள் இதுபோன்ற இடைவெளியால் ஏற்பட்டவை.

கணவர் - தெரியாதது பாதி, தெரிந்தாலும் பொருட்படுத்தாதது பாதி;

தாயார் - துரோகம், அலட்சியம், சூன்யம் போன்றவற்றைக் கருதாமல் பணவரவைக் கருதுவோம்:

✡ இது இறைவன் வரும் தருணம்.

✡ மனிதன் நேரம் வந்துவிட்டதை அறியவில்லை. ஆயிரமாண்டுகளில் நடக்கக்கூடியதை அரை நிமிஷத்தில் நடத்தும் நேரம் வந்துவிட்டதை மனிதன் அறியவில்லை.

✡ ஆனந்தத்தைத் தேடி மறைந்த பிரம்மம் தன்னை மறந்ததை நினைவுபடுத்தும் நேரம் வந்துவிட்டது.

✡ ஞானம் அஞ்ஞானத்தினின்று வெளிவரும் நேரம் வந்துவிட்டது.

✡ பிரம்மம் தேடியது கிடைக்கும் நேரம் வந்துவிட்டது. அதை பிரம்மம் அறியவில்லை.

- ❀ பிரம்மம் பிரம்மத்தை நினைவுபடுத்துவது அருள்.
- ❀ அருள் தன்னை நாடும்பொழுது, இருள் அதை மறுப்பது மருள்.
- ❀ மறுப்பது power திறன்.
- ❀ மறுப்பதானாலும், ஏற்பதானாலும் power திறமை கவர்ச்சியானது.
- ❀ மறுக்கும் சந்தர்ப்பத்தை மனிதன் மறுக்கமாட்டான்.
- ❀ மறுப்பை மறுப்பவரில்லை.
- ❀ மருளின் மறுப்பைமீறி மறந்ததை - தான் மறைந்ததை - நினைவுபடுத்துவது பரிணாமம்.
- ❀ பரிணாமம் தருவது பரமன் தேடும் ஆனந்தம்.
- ❀ பரமன் தேடும் ஆனந்தத்தை பக்தனில், பக்தனுடைய செயலில், அவனது அலட்சியத்தில், துரோகத்தில், அவன் அவதாரத்திற்கு வைக்கும் சூன்யத்தில் காண்பது விழிப்பு, உண்மை, ஏற்கும் திறன்.
- ❀ செயல் ஜீவன் பெறும் நேரம் அது.
- ❀ செயல் ஜீவன் பெறும் நேரம் இறைவன் செயலில் வெளிப்படும் நேரம்.
- ❀ செயல் பகுதி, ஜீவன் முழுமை.
- ❀ விழிப்பு, உண்மை, இறைவன், ஜீவனில் வெளிப்படும் நேரம்.
- ❀ இறைவன் வரும் நேரம் பிரம்மம் ஆனந்தம் பெறும் தருணம்.
- ❀ இறைவனை இறைவனில் காண்பது மனிதன் பெறும் அருள்.
- ❀ இறைவனை ஸ்ரீ அரவிந்தரில் காண்பது மனிதன் சாதகனாவது.
- ❀ இறைவனை அன்னையில் காண்பது அன்பராவதாகும்.



- ❀ இறைவனை வாழ்வின் சாதனையில் நாடுவது வாழ்வை இறைமயமாக்குவதாகும்.
- ❀ இறைவனை வாழ்வின் திறனான பணத்தில் காண்பது வாழ்வில் சாதிப்பதாகும்.
- ❀ இறைவனைச் சேவையில் காண்பது மனிதன் தன் திறமையை உணர்வதாகும்.
- ❀ திறமையில் இறைவனைக் காண்பது தன்னை, தன் அகந்தையை, இறைவனாகக் கருதுதல்.
- ❀ அகந்தை அரங்கத்திற்கு வந்தால் அனந்தனுக்கோ, ஆண்டவ-னுக்கோ அங்கு வேலையில்லை.
- ❀ மனிதன் தன் அகந்தையைத் தான்என அறிகிறான்.
- ❀ தான் அறிவதை வலியுறுத்துகிறான்.
- ❀ கதையில் கணவர் காணாதவற்றை எல்லாம் கண்டபின், கணவர் என்ற உரிமையை விட்டுக்கொடுக்கவேண்டும்எனவும் அவருக்குத் தோன்றவில்லை.
- ❀ தம் மனைவி மனைவியாக இருக்கவேண்டும்என்பதில் கணவர் மனத்தில் மாற்றமில்லை.
- ❀ தாயார், தாம் மனைவியாக நல்ல பெயரெடுக்க வேண்டும்என்பதை இலட்சியமாகக்கொண்டவர்.
- ❀ அன்னை, மனைவியாக அவதரிக்கவேண்டுமானால் அன்னை மனைவியாவார், மனைவி அன்னையாகமாட்டார்.

✡ பெரிய சேவையைச் சாதனையாகச் செய்தவர் பணவரவை அன்னைமூலம் நாடினால் அபரிமிதமாக வரும்என்பதை காதால் கேட்டும், எழுத்தில் படித்தும் ஏற்கமுடியவில்லை.

ஏற்காதவர் செயல்படப்போவதில்லை.

தெரியாதது, அலட்சியம், சூன்யம் விஷயமில்லை.

பகவான் கூறுவதில் விஷயமிருக்கிறது.

அவர் கூறுவது 'அஞ்ஞானம் ருசிக்கிறது'.

அன்னைக்கு அருகிலிருப்பது அருள்.

அருளை அதிகமாகப் பெறுபவர் அஞ்ஞானத்தை அதிகமாக இரசிக்க அருளைப் பயன்படுத்துகிறார்.

விஷயம் விஷயத்திலிருக்கிறது.

விஷயம் நம் இஷ்டத்திலிருக்கிறது (choice).

Choice இல்லாத நேரமில்லை.

எதை நாம் இஷ்டப்படுகிறோம்என்பது விஷயம்.

சிருஷ்டி அமைதியாக அனாதிகாலத்திற்குத் தன்னை அனுபவிக்கிறது.

பரிணாமம் எந்த நேரமும் பரமனைக் காட்டக் காத்திருக்கிறது.

மனிதன் எதை இஷ்டப்பட்டாலும் அது பூர்த்தியாகும்.

- ❀ இஷ்டத்தில் இருப்பவன் இறைவன்.
- ❀ இஷ்டம் கிராக்கியிலிருக்கிறது.
- ❀ மறுப்பது மலைபோன்ற ஆனந்தம்.
- ❀ மகத்துவமே மறுப்பதுதானே.
- ❀ மறுப்பதையும் கடந்தது மறந்தது.
- ❀ மறந்ததன் ஆதி மறைந்தது.
- ❀ மறைந்தது ஆனந்தத்திற்காக.
- ❀ ஆனந்தம் தேடுபவன் அனந்தன்.
- ❀ தேடுவது ஆனந்தம்.
- ❀ தேடும் முயற்சியே ஆனந்தம்.
- ❀ தேடுவது சலனம்.
- ❀ சலனமற்றது பிரம்மம்.
- ❀ சலனமற்ற பிரம்மம் சலனத்தை நாடுவது ஆனந்தம்.
- ❀ சலனம் ஆனந்தமானால், சலனமற்றது பெரிய ஆனந்தம்.



- ❀ ஆனந்தமும், பெரிய ஆனந்தமும் சந்திப்பது சிருஷ்டி.
- ❀ சிருஷ்டியும் பரிணாமமும் சந்திப்பது ஜடம்.
- ❀ ஜடம் சச்சிதானந்தம்.
- ❀ ஜடத்தை சச்சிதானந்தமாக அறிவது ஸ்ரீ அரவிந்தம்.
- ❀ ஜடம் உணரும் ஆனந்தம் (delight) சச்சிதானந்தம் (bliss) உணருவதைவிடப் பெரியது.
- ❀ ஸ்ரீ அரவிந்தம் மூன்றாம்நிலைக் காலத்தில் சத்தை ஜடமாக blissயை delightஆகக் காணும் பரிணாமத்தை நமக்களிக்கிறது.
- ❀ மனிதன் இஷ்டப்பட்டால் தெய்வமாகலாம்.

தாயார் - 20 ஆண்டு சேவை, புதுப்பாடமுறையைச் சாதித்தது, பலனைக் கண்டுபிடித்தவர் தங்களுக்குப் பணம் ஏராளமாகக் காத்திருக்கிறதுஎன்று அறியவில்லை:

✡ உலகில் வேலை செய்யாதவர் பெரும்பாலோர், பிறருழைப்பால் உயிர் வாழ்வதுண்டு, பிறருழைக்க உதவியாயிருப்பதுண்டு. சொந்தமாக உழைத்துச் சாதிப்பவர் உயர்ந்தவர். அதைச் சேவையாகச் செய்பவர் உன்னதமானவர். நாம் சொல்பவர்கள் செய்த சாதனை அரிபொருள். பணம் சாதித்தவரை நாடி விரைந்தோடி வரக் காத்திருக்கிறது.

- ❀ உண்மையான சாதனை உலகில் அரிபொருளானாலும், நாட்டில் பல ஆயிரம் பேருண்டு.
- ❀ அவர்கட்குப் பொதுவாகப் பணத்தட்டுப்பாடிருக்காது.
- ❀ அவர்கள் அறியாத ஆன்மீக உண்மை "பணம் அவர்களை நாடி வந்து சேவைக்கு அபரிமிதமாகப் பயன்படத் துடித்துக்கொண்டு இருக்கிறது".
- ❀ அப்படி வாராததற்கு ஏராளமான காரணங்கள் உண்டு:
  - ☆ நாம் பணத்தை நாடக்கூடாது என்ற நினைவு.

- ✰ பணம் உயர்ந்தது, நமக்குக் கிடைக்காதுஎன்ற அவநம்பிக்கை
- ✰ பணத்தைச் சம்பாதிக்காமல் பெறுவது தவறுஎன்ற நம்பிக்கை.
- ✰ தங்கள் சேவைக்கும், பணத்திற்கும் உள்ள தொடர்பை அறியாதது.
- ✰ பணம் வரத் தடையான பழக்கங்கள் - விரயம், சிக்கனம், அலட்சியம், தகுதியற்றவர்க்குச் செய்யும் உதவி போன்றவை.

- ❀ அப்படிப்பட்டவர்கள் தங்களிடமுள்ள தடைகளை விலக்கினால் பணம் பிரவாகமாக வரும். அது நெகட்டிவாக ஒத்துழைப்பது.
- ❀ பாஸிட்டிவாக ஒத்துழைக்க பணத்தின் தன்மையையும், தங்களுக்குள்ள உரிமையையும் அறிந்து போற்றுவது. அது பிரவாகத்தைப் பெருவெள்ளமாக்கும்.
- ❀ இதுவரை செய்வது கடினம். ஆனால் செய்யலாம். அப்படிப் பெருவாரியாக வந்தது சரியான முறையில் பயன்படுத்த (organise) தொடர்ந்து சேவை அடுத்த அடுத்த கட்டங்கட்கு வளரவேண்டும்.

தொடர்ந்த வளர்ச்சி நிரந்தர மலர்ச்சியை நிலையாக்கும்.

வளர்ச்சி நின்றால் தளர்ச்சி. அது வரக்கூடாது.

- ❀ சமூகம் தனிமனிதனுக்குத் தேவையான ஆயிரம் விஷயங்களை அபரிமிதமாகச் சேமித்துவைத்திருப்பதை மனிதன் அறியவில்லை. உதாரணமாகப் பட்டம் எடுக்கவில்லைஎனப் பதைப்பவருண்டு. இதற்கிருந்த தடைகள் எல்லாம் உதவியாக மாறிவிட்டது. ஆர்வமுள்ள எவரும் இன்று படித்துப் பட்டம்பெற விரும்பினால் கடைசி பட்டம் (Ph.D.) எடுக்கும்வரை சமூகம் ஏராளமான உதவியைப் பெற்றுள்ளது. அதேபோல் ரூ.10,000 மொத்தமாகக் கடன்பெற முடியாதவர்க்கு இன்று இலட்சம், கோடி கிடைக்கும் ஏற்பாடுகள் உலகில் பலித்து நம் நாட்டிற்கும் வந்துவிட்டனஎனப் பெரும்பாலோர் அறியவில்லை. எந்தப் பயன்தரும் வேலைக்கும் பணம் தடையின்றிக் கிடைக்கும்என்பதை எதற்கும் உபயோகம் இல்லாதவர், திறமையற்றவர், சோம்பேறிகள், வேலை செய்யப்



பிரியப்படாதவர் "எங்கே"எனக் கேட்பார்கள். பணம் அவர்களுக்கு இல்லை. படிப்பு, பணம், பதவி, சாதனை, வீடு, கார், வேலை, சௌகரியம் ஆகியவை உரியவர்க்கு உபரியாக உண்டு. இவை ஒவ்வொன்றையும்பற்றித் தனித்தனியாகக் கட்டுரை எழுதலாம். அன்பர் சிறிதளவு பெற ஆரம்பித்துவிட்டால், ஏராளமாக எழுதி அவர்கள் முயற்சியை முழுமைப்படுத்தலாம்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னையை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளம், மனிதன் தன் புனித எண்ணங்களையும், தான் போற்றும் பண்புகளையும், அர்த்தமற்றவை எனவும், தடை எனவும் உணருதலாகும். பிரியம், விஸ்வாசம், நேர்மை ஆகியவை சிறிய மனித எல்லைக்குள் இருக்கும் குணங்கள்என அறிவது அன்னையை நாம் நெருங்குவதாகும். மிகவுயர்ந்த பண்புகளும் மனிதன் அன்னையை முழுவதும் அடைவதைத் தடுக்கும் என்பதே உண்மை என்றாலும், இன்றுள்ள மனிதன் தன் சிறுஆசைகள் முழுவதையும் திருப்திசெய்வதிலேயே முனைந்து உள்ளான்.

***உயர்ந்த பண்பும் உதவாது.***

***சிறு ஆசைகட்கு இடமில்லை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மாக்களுக்குள்ள தொடர்பு அன்பில்லாத தொடர்பாக இருக்கமுடியாது.

***அன்பில்லாத தொடர்பு ஆன்மாவுக்கு இல்லை.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIV. The Supermind — As Creator

Page No.126
Para No.10

There is the other side.
Division is real to Mind.
It can conceive of it precisely.
It can conceive of a totality.
It will be synthetic.
It can think of a boundless finite.
The divided parts can aggregate.
Mind can grasp them.
The divided parts are the same.
The sameness underlies them.
Mind can know them.
But there is an ultimate unity.
It is an absolute infinity.
To the mind they are abstract notions.
They are unseizable quantities.
They are not real to its grasp.
It cannot take them to be the only reality.
This is the very opposite of the One.
The One is a unitarian consciousness.
We have an essential multiplicity.



## 14. சத்தியஜீவியம் - சிருஷ்டிகர்த்தா

அதற்கு மறுபுறம் உண்டு.
மனம் பகுக்கும்.
பகுதியை மனம் தெளிவாக அறியும்.
மனம் முழுமையை அறியும்.
பகுதி சேர்ந்த முழுமையாகும்.
முடிவற்ற பகுதியை மனம் ஏற்கும்.
பகுதி சேரும்.
மனம் அதைப் புரிந்துகொள்ளும்.
பிரிந்த பகுதிகள் ஒன்றுபோலானவை.
அவற்றின் அடிப்படை ஒருமை.
மனம் அதையறியும்.
முடிவான ஐக்கியம் உண்டு.
அது பிரம்மத்தின் அனந்தம்.
இவை மனத்திற்குப் பிடிபடா.
மனத்தின் கையில் பிடிபடாதவை இவை.
பிடித்தால் பிடியுள் அவை கிடைக்கா.
அதை மட்டும் உண்மையென மனம் கொள்ளாது.
ஏகனின் ஒருமைக்கு இவை எதிரானவை.
ஏகன் ஐக்கிய ஜீவியம்.
உலகம் அடிப்படையில் பலவானது.

**It cannot arrive at Unity.**
**If it does, it will abolish itself.**
**Really we are confronting the essential unity.**
**It is an indivisible unity.**
**The multiplicity has a confession to make.**
**It says it could have never existed.**
**Yet it was.**
**It is this that has found unity.**
**Thus it abolished itself.**
**Again, a reductio ad absurdum.**
**It is a violent paradox.**
**It is a repetition.**
**It stuns thought to convince it.**
**This is an irreconciled antithesis.**
**It is a irreconcilable antithesis.**
**It seeks to convince thought.**

**There is a difficulty in the lower term.** **Page No.127**
**Mind is a form of our consciousness.** **Para No.11**
**And it is a preparatory form.**
**When we realise this, the difficulty disappears.**
**Mind is an instrument.**
**It analyses.**
**It synthesises.**
**It is not an instrument of essential knowledge.**
**It cuts out something vaguely.**
**It does so from the unknown thing in itself.**
**It is a measurement.**
**It is a delimitation.**
**Mind calls this the whole.**
**Again it continues the analysis into its parts.**



**உலகம் ஒருமையை அறியாது.**
**ஒருமையை ஏற்றால் உலகம் தன்னையழிக்கும்.**
**அடிப்படை ஒருமையுடன் நாம் இப்படி மோதுகிறோம்.**
**அது பகுக்கவொண்ணாதது.**
**பல தம் உண்மைகளை வெளியிடுகின்றன.**
**தான் பிறந்திருக்கமுடியாதுஎனக் கூறும்.**
**இருப்பினும், உலகம் நித்தியம்.**
**இதுவே ஒற்றுமையைக் கண்டது.**
**உலகம், இவ்விதம் தன்னை அழித்துக்கொள்கிறது.**
**மீண்டும், நாம் ஓர் அபத்தத்தைக் காண்கிறோம்.**
**இது கடுமையான முரண்பாடு.**
**மீண்டும் நாம் அதைக் கூறுகிறோம்.**
**மனத்தை திகைக்கவைத்துத் தெளிவுபடுத்தும் முறையிது.**
**இது ஒத்துவரமுடியாத முரண்பாடு.**
**இணையமுடியாத எதிர்ப்பு இது.**
**இது மனத்தைத் தெளிவுபடுத்த முயல்கிறது.**

**சிறிய தத்துவத்தில் சிக்கல் உண்டு.**
**மனம் நம் ஜீவியத்தின் ரூபம்.**
**அது ஆரம்பம்.**
**இதை நாம் அறிந்தால், சிரமம் விலகும்.**
**மனம் ஒரு கருவி.**
**அது ஆராயும்.**
**அது சேர்த்துப்பிடிக்கும்.**
**அடிப்படை ஞானத்தின் கருவியன்று மனம்.**
**விவரமற்றதை அது வெட்டிப்பிரிக்கிறது.**
**அறியமுடியாததினின்று அப்படி எடுக்கிறது.**
**அது ஓர் அளவுகோல்.**
**அது ஒரு வரையறை.**
**மனம் இதை முழுமையெனக்கொள்ளும்.**
**மீண்டும் மனம் தன் ஆராய்ச்சியைத் தொடரும்.**

**To it they are separate mental objects.
They are only parts.
They are mere accidents.
Mind can see only them definitely.
It does so after a fashion.
It knows them thus.
There is the assemblage of parts.
Or there is a totality of properties.
Or they can be accidents.
To the mind these are the wholes.
This is its definite idea of the whole.
The whole is a part of something to the mind.
The whole can reveal itself in its parts.
Or it can be seen in its properties or accidents.
Anything else is a vague perception to the mind.
Mind understands analysis.
The object must be a totality in a larger totality.
It must be so constituted.
Then the mind can know it.
Really mind does not know.
It knows only its analysis.
It analyses the object or the idea.
It forms an idea by a synthesis.
It is a synthesis of separate parts.
Or it is a synthesis of properties.
It is mind's characteristic power.
It is its sure function.
They cease there.
We would have a greater knowledge.
It would be real and profound.**



**மனத்திற்கு அவை தனித்தனிப் பொருள்களாகும்.
அவை பகுதிகள்.
அவை தற்செயலாய் எழுந்தவை.
மனம் அவற்றைமட்டும் காணமுடியும்.
ஏதோ அது கண்டது அது.
மனம் அவற்றை அப்படி அறிகிறது.
பகுதிகள் சேர்ந்த முழுமையுண்டு.
அல்லது குணச்சேர்க்கையுண்டு.
அவையும் தற்செயலாய் எழுந்தவை.
மனம் அவற்றை முழுமையாக ஏற்கிறது.
மனம் முழுமையென நிச்சயமாகக் கருதுவது இது.
முழுமையென்பது மனத்திற்கு முழுமையின் பகுதி.
முழுமை பகுதியில் தன்னை வெளிப்படுத்தமுடியும்.
முழுமை அதன் குணங்களிலோ, தற்செயலாய் எழுந்தவற்றிலோ காணமுடியும்.
மற்றவை மனத்திற்குத் தெளிவற்றவை.
மனம் ஆராய்ச்சியை அறியும்.
முழுமை என்பது பெரிய முழுமையின் பகுதி.
அது அப்படி ஏற்பட்டிருக்கவேண்டும்.
அப்படியெனில் மனம் புரிந்துகொள்ளும்.
உண்மையில் மனம் அறியாது.
மனம் தன் ஆராய்ச்சியை அறியும்.
தன் எண்ணம் குறிக்கும் பொருளை அது ஆராயும்.
ஆராய்ச்சியைச் சேர்த்து ஓர் எண்ணமாக்கும்.
பகுதிகள் சேர்ந்த முழுமையிது.
அல்லது குணங்கள் சேர்ந்த முழுமையிது.
இதுவே மனத்தின் முத்திரை.
இது மனத்தின் நிச்சயமான அஸ்திவாரம்.
அத்துடன் அது முடியும்.
நமக்குப் பெரிய ஞானம் உண்டு.
அது உண்மையானது, உயர்வானது.**

(There are deep parts of us.
They are inarticulate.
They are of our mentality.
A sentiment arises from these.
It is formless.
It is intense.
It is not knowledge.)
To achieve it mind must move away.
Another consciousness must come in.
It will fulfill mind.
It does so by rising above it.
Or it does so by a reversal.
Thus its operations are rectified.
It does so by leaping beyond it.
That leap can be taken from the summit of Mind.
It is a vaulting board.
Mind has a great duty.
Our consciousness is obscure.
It can train it.
Matter is a dark prison.
Consciousness emerged out of it.
Mind's instincts are blind.
It can be enlightened.
The intuitions are random.
Its perceptions are vague.
It must be helped to ascend.
It must be shown the higher light.
Mind is a passage.
It is not an end.

*Contd...*

❀❀❀



(நம்முள் ஆழ்ந்த பகுதிகள் உண்டு.
அவை சொல்லற்றவை.
அது நம் மனம்.
அதனினின்று ஓர் உணர்ச்சி எழுகிறது.
அதற்கு ரூபமில்லை.
அது தீவிரமானது.
அது ஞானமில்லை.)
அதையடைய, மனம் தன்னைவிட்டகலவேண்டும்.
வேறொரு ஜீவியம் எழவேண்டும்.
அது மனத்தைப் பூர்த்திசெய்யும்.
மனத்தைக்கடந்து அது இதைச் சாதிக்கும்.
அல்லது தான் தலைகீழே மாறி அதைச் செய்யும்.
அவ்வகை மனம் தன் செயலின் குறையைப் போக்கும்.
தன்னை வலியக் கடந்து மனம் அதைச் சாதிக்கும்.
மனத்தின் சிகரத்திலிருந்து குதிக்கவேண்டும்.
தாவும் கட்டம் அது.
மனத்திற்குப் பெரிய கடமையுண்டு.
மனத்தின் ஜீவியம் இருளானது.
மனம் அதற்குப் பயிற்சியளிக்கும்.
ஜடம் இருண்ட சிறை.
ஜீவியம் அதிலிருந்து எழுந்தது.
மனத்தின் உணர்ச்சி குருடானது.
அதைத் தெளிவுபடுத்தலாம்.
அதன் ஞானம் முறையற்றது.
அதன் ருசி விவரமற்றது.
மனம் எழ நாம் உதவவேண்டும்.
உயர்ந்த ஜோதியை நாம் அதற்குக் காட்டவேண்டும்.
மனம் பாதை.
மனம் முடிவன்று.

தொடரும்...

❀❀❀

## P.61 He gives to his timeless thoughts a form in Time.

**காலத்தைக்கடந்த எண்ணத்திற்குக் காலத்தின் ரூபம் தருகிறான்.**

- ✡ அவனே பிரம்மம், அவனே சிருஷ்டி.
- ✡ திறனும், வலுவும் உள்ள அவள் வேலையை அவள் அவனில் செய்கிறாள்.
- ✡ தம் போக்கு என்ற மாயத்துள் அவனை அவள் சூழ்ந்துள்ளாள்.
- ✡ தன் எண்ணிலடங்கா கனவுகளை அவனது எல்லையில்லாச் சத்தியத்துள் உருவாக்குகிறாள்.
- ✡ ஆத்மாவின் தலைவன் அவளை அணுகி நிற்கிறான்.
- ✡ க்ஷணத்தில் மறையும் நேரத்துள் மரணமிலா மகவு பிறக்கிறது.
- ✡ பொருள் பெறும் உருவம், மனிதன் பெறும் கருத்து.
- ✡ அவன் நினைவை அவள் கனவாகத் தொடர்கிறாள்.
- ✡ இங்குமங்குமாய் அவனது சாயல் கண்ணில்படும்.
- ✡ முடிவில்லாத பிறப்புகள் முடிவில்லாமல் அவனால் முகம் பெறுகின்றன.
- ✡ சிருஷ்டியும், சிருஷ்டிகர்த்தாவும் அவனே.
- ✡ அவனே திருஷ்டி, அவனே ரிஷி.
- ✡ நடிப்பவனும், நடிப்பும் அவனே.
- ✡ மனமும், பொருளும் அவனே.
- ✡ கனவும் அவனே, காண்பவனும் அவனே.
- ✡ பலவாகும் ஏகன் அவனே, பல லோகலீலையும் அவனே.
- ✡ ஞானமாய், அறியாமையாய் அவர்கள் சந்தித்தனர், கலந்தனர்.
- ✡ இருளும், ஒளியும் அவர் பார்வை கலப்பது.
- ✡ மகிழ்ச்சியும், மனவேதனையும் அவர் மல்யுத்தமும், மார்புறத் தழுவுவதும்.



- ✡ நம் செயலும், நினைவும் அவர் உள்ளக்கிடக்கைக்குள் அடக்கம்.
- ✡ நம் வாழ்வின் எண்ணத்துள் அவை இரண்டறக் கலந்தன.
- ✡ பிரபஞ்சம் பிரபலமான திரைக்குப்பின் உருவம்.
- ✡ காண்பது எதுவும் கண்ணுக்குத்தெரிவதன்று.
- ✡ அது சத்தியத்தின் கனவுலகக் கருத்து.
- ✡ கனவில்லாமல் அக்கருத்தில்லை.
- ✡ தோற்றம் பொருட்டாய் எழுந்தது.
- ✡ காலத்தைக்கடந்த புகைமண்டலச்சூழல்.
- ✡ எதிர்கொள்வதை ஏற்கிறோம், கூறுவதைக் கேட்கிறோம்.
- ✡ பகுதியை முழுமையாக ஏற்கிறோம்.
- ✡ நம் வாழ்வை அவர் லீலையாக்கினார்.
- ✡ கவியாகவும், நடிகனாகவும், திரையாகவுமான அவன்.
- ✡ ஆத்மாவாக அவனும், பிரகிருதியாக அவளும் உள்ளனர்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எண்ணம் - சிந்தனை - திருஷ்டி - ஞானம் - சத்தியஜீவியம் - ஜீவியம் - சத்தியம் - பிரம்மம் என்பது அடுத்தடுத்த உயர்நிலைகள். மனிதன், அறிவுஉணர்வின் அனுபவம் - உடலின் திறன் - ஜடத்தின் ஐக்கிய ஞானம் அறியாமை தன்னை அறிவாகக் காண்பது - எல்லாம் உணர்ந்த ஜடம் என்பது அடுத்தவகையில் சொல்லப்படுவது. அவை சந்திக்கும் இடத்தில் ஆன்மீகப்பரிணாமம் ஆரம்பிக்கிறது.

*பரிணாமமும், சிருஷ்டியும் சந்தித்தால் வளராத ஆத்மா வளர ஆரம்பிக்கும்.*

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(பிப்ரவரி 2006 இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**869) சமூகவாழ்வு மலர்வதை உணர்வின் குறிக்கோளாகக் கொண்டு, அதை தம் வாழ்வு வெளிப்படுத்தும்வகையில் வாழ்பவருக்கு அது முடியும்.**

*சமூகவாழ்வை தம் வாழ்வாக்கியவருக்கு அது முடியும்.*

- ✡ ஜீவன் மலரும்.
- ✡ ஜீவனற்றது வாடும்.
- ✡ ஒருவர் சமூகத்தை ஏற்றால், சமூகத்தின் ஜீவனை அவர் தொடுவார்.
- ✡ சமூகத்தின் குறிக்கோளில் சமூகத்தின் ஜீவனுள்ளது.
- ✡ அவருடைய ஜீவன் அவருடைய குறிக்கோளில் உள்ளது.
- ✡ சமூகத்தின் குறிக்கோளை தம் குறிக்கோளாக ஏற்றால் ஜீவன் ஜீவனோடு கலக்கும்.
- ✡ அரசியல் இயக்கங்கள் ஆரம்பக்காலத்தில் நசுக்கப்படும்.
- ✡ புரட்சிக்காரர்கள் இரகஸ்யமாகக் கூடுவார்கள்.
- ✡ ஆரம்பத்தில் புரட்சிக்காரர்களுக்குக் கூட்டம் வாராது.
- ✡ அதனால் வீடுகளில் 30, 40 பேரைச் சந்தித்துப் பேசுவார்கள்.
- ✡ அன்றாடம் சந்திப்பவர்கள் அனைவருக்கும் புரட்சிச்செய்தி அன்று மாலை போய்விடும்.
- ✡ கேட்டது 40 பேரானாலும், அறிந்தது 1000 பேராகும்.
- ✡ அது பரவுவது வாய்மொழியால்.
- ✡ ஜீவனுள்ள இடத்தில் வாய்மொழி பரவும்.
- ✡ புரட்சிக்காரர்கள் பிறகு ஆட்சியைப் பிடித்துவிடுவார்கள்.



- ✡ ஆட்சியைப் பிடிக்க ஜீவன் வேண்டும்.
- ✡ மகாத்மா காந்தியைப்பற்றி பேப்பரில் படித்தது நாட்டில் 10,000 பேர்.
- ✡ அதை அன்றே தெரிந்துகொண்டவர்கள் 10 இலட்சம் பேர்.
- ✡ வாய்மொழிக்கு எத்தனை தூரம், எத்தனை பேர் என்ற கணக்கில்லை.
- ✡ தமிழ்நாட்டில் அன்னையை 1980க்குமுன் அறிந்தவரை விரல்விட்டு எண்ணலாம்.
- ✡ அறிந்தவர்கள் அமுதசுரபிமூலம் அறிந்தவர்கள்.
- ✡ அமுதசுரபி வாரப்பத்திரிகையோ இலட்சக்கணக்காக விற்கும் பத்திரிகையோயில்லை.
- ✡ 1986இல் 'அன்னை தரிசனம்' 1000 பிரதிகள் வெளியிட்டோம்.
- ✡ 1990இல் தமிழ்நாட்டில் அன்னையை அறியாதவரில்லை.
- ✡ அன்னை படமில்லாத வீடு, கடையில்லை.
- ✡ 1992இல் பெட்ரோல் பங்க்குக்கு வருபவர் அன்னை படம் இல்லாவிட்டால் அடுத்த இடம் போய்விடுவார்.
- ✡ 1000 பிரதிகள் அனைத்து தமிழகத்திற்கும் தெரிவிக்கமுடியுமா?
- ✡ தெரிவித்தது வாய்மொழி.

❀❀❀

**870) வாய்மொழி பரவும் நிபந்தனைகள்:**

**(1) அவ்வளர்ச்சியை உன் உணர்வுப்பெருக்கு நாட வேண்டும்.**

**(2) அவருடைய வாழ்வும், தொழிலும் அவ்வலையோசை-யோடு இணைந்திருக்கவேண்டும்.**

**(3) சமூக வளர்ச்சியார்வமும், அவன் செய்யும் நடைமுறையில் இணைக்கப்படவேண்டும்.**

(4) அவர் தொழில் அல்லது product சரக்கு அந்தச் சமூக வளர்ச்சியையும், அவரது இலட்சிய ஆர்வத்தையும் பிரதிபலிக்கவேண்டும்.

இந்த நான்கு அம்சமும் இசைந்திணைந்த பூரண முழுமையாகவேண்டும்.

*வாழ்வும், தொழிலும் சமூக அலையோசையுடன் ஒன்றியிருக்கவேண்டும்.*

✡ எவனொருவன் சமூக அபிலாஷையைப் பிரதிபலிக்கின்றானோ அவனைப்பற்றி வாய்மொழி பரவும். அவன் முன்னோடி.

✡ முன்னோடி சமூகத்தின் பிரதிநிதி.

✡ அவன் எழுத்தாளனானால், அவன் எழுத்து சமூகத்தின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும்.

✡ அவன் தலைவனானால், அவன் செயல் மக்களின் ஆர்வத்தைச் சாதிக்க முயலும்.

✡ அவன் விளையாட்டுவீரனானால், சமூகம் தன் உடலைப் போற்றிப் பேணுவதை அவன் செயலில் காணலாம்.

✡ அவை எழுச்சியாகவுமிருக்கும்; எழுச்சிக்கு எதிரானதாகவுமிருக்கும்.

✡ நாட்டில் தேசபக்தி வளரும்பொழுது, தேசபக்தனுடைய பாடல் பரவும்.

✡ நாட்டில் நாத்திகம் வளரும்பொழுது, நாட்டின் அடிமனத்தில் பக்தி வளரும். எவனொருவன் அப்பக்தியைப் பிரதிநிதியாகப் பிரதிபலிக்கிறானோ அவனைப்பற்றி வாய்மொழி செய்தியைப் பரப்பும்.

✡ நாடு என்பது சமூகம்.

✡ சமூகம் நல்லது, கெட்டதைப் பிரித்துணர நாளாகும்.

✡ ஆரம்பத்தில் நல்லதோ, கெட்டதோ காரியம் கூடிவரவேண்டும்என நாடு முனையும்.

✡ காரியம் பெருமளவில் கைகூடிவந்தபின் - செல்வம் பெருகியபின் - நல்லது வேண்டும், கெட்டது வேண்டாம்எனச் சமுதாயம் நினைக்கும்.



✡ வளர ஆரம்பிக்கும்பொழுது சமூகம் சாதிப்பவனைத் தலைவனாக ஏற்கும். அவன் புகழ்பாடும். வாய்மொழி அவனுக்கேயுரியது.

✡ பிரபலமடைவது திறமையன்று, நாணயமன்று, சிறப்பன்று, நாட்டுக்குத் தேவையானது (evolutionary necessity) பிரபலமடையும்.

வாய்மொழி அதையே கருதும்.

✡ நாட்டுக்குத் தேவையானது நிலையான சர்க்கார்எனில் நாடு மக்களாட்சியைக் கருதாது. மக்களாட்சியோ, எதேச்சாதிகாரமோ ஆட்சியிருந்தால்போதும்என எழும் தலைவனை ஏற்கும்.

✡ வாய்மொழி என்பது ஜீவனுள்ளது.

✡ ஜீவன் நாட்டின் தேவையை, அந்த நேரமுள்ள தேவையை, முழுவதும் பூர்த்திசெய்யும்.

வாய்மொழி அதன் கருவி.

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

எதிரியை ஏற்றவனுக்கே ஏற்றம் உண்டு.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அளவோடு சாதிக்க அகந்தை ஏற்பட்டது. தன்னைமட்டும் அறியும் திறனுடையது. அளவிறந்து சாதிக்கும் திறன் பெற்றால் அகந்தையைத் தாண்டலாம். அளவிறந்த நல்ல (பிராண) சக்தியாலும், திறனுடைய விசாலப் புத்தியாலும், அகந்தையை வெல்லமுடியும்.

***அளவு அளவைக் கடந்தால், அளவுக்கான அகந்தை அழியும்.***

## The diamond light melts the hostile forces.

**வைரஒளி தீயசக்திகளை அழிக்கவல்லது.**

- ✡ இதுவரை 7 முறை சிருஷ்டி ஏற்பட்டு, முதல் 6 சிருஷ்டி பிரளயத்தால் அழிக்கப்பட்டது.
- ✡ இது ஏழாவது சிருஷ்டி.
- ✡ இறைவன் திருவுள்ளம் இப்பொழுது பூர்த்தியாகும்.
- ✡ முதல் சிருஷ்டியில் உற்பத்தியான 4 கடவுள்கள் இறைவனுக்கு எதிராக மாறினர். அவர்களே தீயசக்திகள் என்பவை.
- ✡ வெண்மையான ஒளி சத்புருஷனுடையது.
- ✡ தங்கநிறம் சத்தியஜீவிய ஒளி.
- ✡ வெண்மை கலந்த நீலஒளி தெய்வலோகத்திற்குரியது.
- ✡ ஒளி என்பது ஞானம். அது சக்தி பெற்று, உயர்ந்து வைரஒளி ஆகிறது.
- ✡ சிவந்த நிறம் உடலுக்குரியது.
- ✡ ஊதா நிறம் உயிருக்குரியது.
- ✡ மஞ்சள் நிறம் மனத்திற்குரியது.
- ✡ இறைவனுக்கு எதிரான 4 அசுரர்கள்:

  1) Lord of Death — எமதர்மன்.
  2) Lord of Falsehood — பொய்யின் தெய்வம்.
  3) Lord of Darkness — இருளின் தேவதை.
  4) Lord of Suffering — வேதனையின் தெய்வம்.



- ✡ அன்னையின் குருவான தியோன் என்பவரை அன்னை Lord of Death என்கிறார்.
- ✡ இவை 4 எனில் ஒவ்வொரு தேவதைக்கும் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான பிரதிநிதிகள் உலகில் உண்டு. அவை நம்மில் பலரிடம் காணப்படும்.
- ✡ அன்னை கூறும் நால்வர் தலைவர்கள்.
- ✡ ஒளி ஞானம் தரும். அந்த ஞானத்தின்மூலம் சக்திபெற்று இவர்களையோ, இவர்கள் பிரதிநிதிகளையோ அழிக்கலாம்.
- ✡ ஒளி சிறப்புப்பெற்றால் அத்துடன் வலிமையும் வரும்.
- ✡ வைரஒளி அங்ஙனம் வலிமைபெற்றது.
- ✡ சிலசமயங்களில் எதிரி எத்தனைத் தவறுகள் செய்தாலும், எவ்வளவு வலுவாக நாம் தாக்கினாலும், அவனை முறியடிக்கமுடிவதில்லை.
- ✡ அப்படிப்பட்டவன் இதுபோன்ற தேவதையின் பிரதிநிதியாக இருப்பான்.
- ✡ இந்த சக்தி நம்மிடம் இருப்பதுண்டு.
- ✡ அதை நாம் அறிந்து, அன்னைக்குச் சரணடைந்தால், அவர் அதைக் கரைத்துவிடுவார்.
- ✡ அப்படிப்பட்டவர் அன்னைமுன் வந்தபொழுது, அவர் உடல் முழுவதும் கரைந்து, ஒளிமயமாகி, உலகம் முழுவதும் பரவியது. முடிவாக ஒரு கறுப்புப்புள்ளி மிச்சமாக இருந்தது. அதைச் சரணம் செய்வதோ, உயிர்ப்பிப்பதோ அவர் முடிவு.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரம்மமும், சிருஷ்டியும் ஒன்றே. நம் பார்வையில்தான் மாறுகிறது என்றறியும் நேரம் வாழ்வு பூரணம்பெறுகிறது.

***சிருஷ்டியில் பிரம்மத்தைக் கண்டால் வாழ்வு பூரணமாகும்.***

# கால் சென்டர்

வி.ரமேஷ்குமார்

மாலை மணி ஆறு. பேக்டரியில் அனைவரும் சென்றுவிட்டார்கள். நான் எப்போது போவேனோ என்று வழிமேல் விழிவைத்து காத்திருந்தான் வாட்ச்மேன். ஜன்னல் வழியாகப் பக்கத்தில் இருந்த பூங்காவைப் பார்த்தேன்.... காதல் ஜோடிகள், நடைப்பயிற்சி செய்யும் முதியோர்கள், உற்சாகம்கொப்பளிக்க விளையாடும் குழந்தைகள்... என்னைத்தவிர உலகத்தில் அனைவரும் சந்தோஷமாக இருப்பதுபோல்பட்டது.

கொஞ்சநாட்களாகவே வாழ்க்கை ஒரு சுவாரசியமும் இல்லாமல் இருக்கிறது. வியாபாரம் எதிர்பார்த்தவிதத்தில் இல்லை. நஷ்டமில்லாமல் ஓட்டுவதே போராட்டமாக இருந்தது. நாளைய பணப்புரட்டல்களுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் நண்பர் ஜெகனைக் கேட்க... அவர் ஆறு மணிக்கு வருவதாகச் சொன்னதால் இந்தக் காத்திருப்பு. இன்னதுதான் செய்வது என்று தெரியாமல் குழப்பத்தில் இரண்டு ஊதுவத்தி ஏற்றி அன்னை படத்தருகில் வைத்துவிட்டு பார்த்துக்கொண்டு இருந்தேன்.... நினைவுகள் பின்நோக்கிச் சென்றது.

Injection moulding மற்றும் pet recycling projectக்காக, இருந்த நல்ல வேலையையும் இராஜினாமா செய்துவிட்டு பேங்க்லோனுக்காக அலைந்தபோதுதான் தெரிந்தது.... இவையெல்லாம் சாமானியனுக்கு இல்லை என்று. முப்பதே நாட்களில் முடித்துக்கொடுப்பதாகச் சொன்ன பேங்க் மேனேஜர்.... ஆயிரம் சான்றிதழ்கள் கேட்க ஆறு மாதங்களாகியும் ஒரு டேபிள்கூட நகராமல் இருந்தது என் ஃபைல். கையிருப்போடு, எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கையும் கரைந்தது. வீட்டிலிருக்கும் பூச்சிகள்கூட என்னை மதிக்காமல் என்னைமட்டுமே கடிப்பதாக பிரமை. 'ஜாதகத்தில்' நேரம்சரியில்லாததால் 'எதுவும்' கூடிவரவில்லையாம்.



விரக்தியின் உச்சத்தில் இருந்தபோதுதான் நண்பர் ஜெகன் ஓரிடத்திற்கு வரச் சொன்னார். குடும்ப நண்பரானதால் தட்டமுடியாமல் சென்றேன். அங்குப் பலர் அமைதியாக உட்கார்ந்து தியானம் செய்து கொண்டு இருந்தனர். அந்த அமைதி.... எனக்குப் புதிது. நடந்து சென்று அனைவரையும் பார்த்து.... இதுதான் இங்கு வழிபடும் முறையோ என்று மண்டியிட்டு அன்னை படத்தின்கீழ் தலைவைத்தேன். வாழ்க்கையில் நான் மண்டியிடுவது என்பது இதுவே முதல்முறை. காரணமே இல்லாமல்..... சிறுவயதில் நானும், என் தங்கையும் பள்ளிவிட்டு ஓடிவந்து.... யார் முதலில்... என்று அம்மா மடியில் தொப்பென்று விழ.... செல்லமாய்த் திட்டிக்கொண்டே வாஞ்சையுடன் தாய் தடவிக்கொடுக்கும் சுகம் ஏனோ நினைவுக்குவந்தது. அதே சுகம் இப்போது உடலில் பரவுவதுபோலத் தோன்ற அந்த அன்பைத் தாங்கமுடியாமல் நெஞ்சுநெகிழ்ந்து அழுகைவர ஆரம்பித்தது. யாரும் பார்த்துவிடுவார்களோ என்று சட்டென்று எழுந்து, ஓரமாக உட்கார்ந்தேன். ஒருவித இலேசான இதயத்துடன் வீடு திரும்பியதும், உறங்கியதும், விவரிக்க இயலாதது.

அவர்மூலம் அன்னையை அறிந்து வழிபட்டேன். அன்னை படத்தின்முன் உட்கார்ந்து தியானம் செய்தேன்.

மறுநாள்.....

ஏதோ ஒரு சக்தி உள்ளே வந்ததுபோல இருந்தது. பேங்க்குக்குச் சென்றேன். வழக்கமாக என்னைப் பார்த்தாலே தீவிரமாக வேலை செய்வதுபோல இருக்கும் மேனேஜர் எழுந்து வரவேற்றார். "நேற்றுதான் ஞாபகம்வந்தது. எங்கள் பேங்க் ரூலில்.... புராஜக்ட் ஸ்டேட்மெண்டில் உள்ளதில் *10%* confirmed order from a reputed company காட்டினால் லோன் தரலாம் என்று உள்ளது" என்றார். ஐயோ*!* 'மீண்டும் ஒரு சான்றிதழா' என்று இருந்தாலும், அதே துறையில் இருந்ததால், அதைப் பெறுவதில் ஒன்றும் சிரமம் இருக்கவில்லை. அதன்பின் பதினைந்தே நாட்களில் லோன் வந்ததும், மூன்றே மாதங்களில் மிஷின்கள் இறங்கி, உற்பத்தி தொடங்கியதும் இன்று நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கிறது.

எல்லாம் Gestation period முடியும்வரைதான். லோன் கட்டும் நேரம் வந்தபோதுதான் தெரிந்தது, 'பேக்டரி தன்னைத்தானே சமாளித்துக்

கொள்ளும் நிலையில் இல்லை’யென்று. என்ன செய்வது என்று தெரியாமல் உருட்டல்.... புரட்டலில் ஓடிக்கொண்டுஇருக்கிறது.

கதவு தட்டப்பட... ஜெகன் உள்ளே நுழைந்தார். பணம்பற்றிப் பேசுவார் என்று ஆவலோடு பார்த்தேன். “கேட்கிறேன் என்று தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இன்னும் எவ்வளவு நாளைக்கு இப்படி உருட்டல், புரட்டலில் ஓட்டப்போகிறீர்கள்” என்றார் ஜெகன்.

“என்ன செய்வது... ஆர்டர்கள் ஒன்றும் சரியாக இல்லை. நல்லகாலம் வரும்வரை இப்படியே சமாளித்து ஓட்டிக்கொண்டுஇருக்க வேண்டியதுதான்” என்றேன்.

“ஒன்பது மாதங்களுக்குமுன் நல்லகாலம் இருந்துதான் இந்த பாக்டரி வந்ததா?” ஜெகனின் கேள்வி தாக்கியது.

“இல்லை, அது அன்னையிடம் சென்றதால் வந்தது. அதில் சந்தேகமே இல்லை. ஆனால், அதன்பின் எந்தப் பிரார்த்தனையும் பலிக்கவில்லையே? நம் விதி அவ்வளவுதான் என்று விட்டுவிட்டேன். ஆனாலும் நம்பிக்கை இல்லாமல் இல்லை. அதனால்தான் வேறு எந்தப் பரம்பரை சம்பிரதாயங்கள் எதுவும் வேண்டாம் என்றுவிட்டு அன்னைமட்டுமேபோதும் என்று இருக்கிறேன். அன்னைதான் கண் திறக்கமாட்டேன் என்கிறார்” என்றேன்.

சிரித்தார் ஜெகன்.

‘‘அதனால்தான் உங்களின் அத்தனைக் குளறுபடிகளையும்மீறி பாக்டரி இன்றும் நடக்கிறது. என்றாலும் நினைத்துப்பாருங்கள்... வேறு படத்திற்கு பதிலாக அன்னை, பகவான் படங்கள்... பூமாலைக்குப்பதிலாக தட்டில் மலர்கள்.... விளக்குக்குப்பதிலாக ஊதுவத்தி.... இதுதானே நீங்கள் சொல்லும் நம்பிக்கை.... எண்ணங்கள், முறைகள் எல்லாம் அப்படியே உள்ளதே. நீங்கள் செய்யும் பிரார்த்தனைகளையெல்லாம் நிறைவேற்றுவது தான் அன்னை வேலையா?”

“இல்லைதான். நானும் அன்னைக் கொள்கைப்படி இருக்கத்தான் விரும்புகிறேன்..... முடிந்தவரை சுத்தமாக இருக்கிறேன்..... முடிந்தவரை கணக்கு எழுதுகிறேன். ஆனால், மற்றனவெல்லாம் முடியவில்லையே.... கத்தவில்லை என்றால் வேலை நடக்காது. போட்டி, கயமை, தந்திரம் என்பது தொழில்தர்மமாகிவிட்டது. அப்போதைக்கப்போது வரும் வேலையைச் செய்யவேண்டி இருப்பதால் organised ஆக, punctualஆக இருக்கமுடியவில்லை”..... இழுத்தேன்.



‘‘முடியாது என்பதுபற்றி இப்போது பேசவேண்டாம். முடிந்தவரை என்றீர்கள் அல்லவா..... சுத்தம்..... இந்த பாக்டரியை மீண்டும் ஒருமுறை சுற்றிப்பார்த்து, ஒரு படி உயர்த்தமுடியுமா.... அதேபோல கணக்கு.... உங்கள் பார்ட்டைம் அக்கவுண்டண்ட் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறைதானே வருகிறார். அதுவரை அத்தனையும் இதோ கிடக்கின்றன. இன்றைய கணக்கு என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?..... குறைந்தபட்சம் day book மட்டுமாவது அன்றைக்கன்றே முடித்துப்பாருங்களேன்’’....

அவர் வார்த்தைகளில் இருந்த உண்மை எனக்குப் பிடிக்கவில்லை. பணவிஷயத்தைப்பற்றிப் பேசுவார் என்றுபார்த்தால்..... எரிச்சலாக வந்தது.

‘‘என்ன? ஏதேதோ பேசுகிறேன் என்று பார்க்கிறீர்களா? என் நண்பர் பைனான்சியர் ஊரில் இல்லை. அடுத்த வாரம்தான் வருகிறாராம்’’ என்றவாறே எழுந்தார்.

அவர் சென்றபிறகும் யோசித்துகொண்டே இருந்தேன். உண்மைதான். இன்றைய ஸ்டாக் என்ன என்பது எனக்குத் தெரியாது. பாங்கிலிருந்து செக் வந்துள்ளதாகக் கூப்பிட்டால்தான் தெரியும். அரக்கபரக்க இரண்டு மணிக்குள் புரட்டிக் கட்டுவதுதான் பழக்கம். இதற்கே நேரம் சரியாக இருக்கும்போது எங்கே வியாபார முன்னேற்றம்பற்றி நினைப்பது.... எருதின் வலி காக்கைக்குத் தெரியுமா? செய்துபார்த்தால் தெரியும்.... மனதிற்குள் திட்டிக்கொண்டேன்.

திடீரென மின்சாரம்நின்றது. திடுக்கிட்டேன். என் இருளடைந்த மனதைப் பிரதிபலிக்கிறதா? அன்பரைத் திட்டியது தவறோ?..... படபடப்பானது. “அன்பரைக் கோபித்ததற்கு மன்னியுங்கள் அன்னையே. நாளைமுதல் அவர் சொன்ன இரண்டையும் பின்பற்றுகிறேன். மன்னித்ததற்கு அடையாளமாக இப்போதே மின்சாரம் வரவேண்டும்’’ வேண்டினேன்.

பளிச்சென்று முன்னிலும் அதிகவெளிச்சம் வந்தது. ஆச்சரியமாகவும், வெறுப்பாகவும் இருந்தது. ஒவ்வொன்றும் உடனுக்குடன் பதில் கிடைக்கிறது. பின் ஏன் எப்போதும் அன்னையை நம்பியிருக்க முடிவதில்லை?....

மறுநாள்.....

காலையிலேயே வந்துவிட்டேன். சூப்பர்வைசரைக் கூப்பிட்டேன். ‘‘வெள்ளியன்று பாங்க் இன்ஸ்பெக்ஷன். சுத்தம்செய்து ஒழுங்குபடுத்து. ஒரு போல்ட்-நட்கூட அழுக்காக இருக்கக்கூடாது’’ சொல்லிவிட்டு

நான்கைந்து நாள் வவுச்சர்களைப் பார்க்க ஆரம்பித்தேன். Quarterly analysisஇன்போது பெரிய விஷயமாகப் படாதனவெல்லாம், தினக் கணக்குகளில் பார்த்தால்.... மலைப்பாக இருந்தது செலவுகள்.... எந்தவிதப் பிளானும் இல்லாமல் இன்னும் ஒரு மாதத்திற்குத் தினமும் 'பின்தேதியிட்ட காசோலைகள்' கொடுத்திருப்பது தெரிந்தது..... அப்படியே வியாபாரப் பேச்சுகளில் மூழ்கிப்போக..... மதியம் இறங்கிவந்து பாக்டரியைப் பார்த்தபோது இடமே மாறி இருந்தது. முடிந்தவரை சுத்தம்..... என்பது உண்மையில் 20%தான். எனக்கே வெட்கமாக இருந்தது. சுத்தம் என்பதும், தேவையில்லாததை ஒழிப்பது என்பதும் ஒரு கலை என்பது இப்போதுதான் புரிந்தது. அதேபோல அன்றாடம் பார்ப்பதானால்...... கணக்கும் இருபது நிமிட வேலைதான். எவ்வளவு அறியாமை?..... என் ஈகோவுக்கு விழுந்த அடி வலித்தது.

நண்பர் ஜெகனுக்குப் போன் போட்டு, முடிந்தால் மாலை வரச்சொன்னேன்.

மாலை.....

நண்பரோடு பேசிக்கொண்டிருந்தபோது மணி அடித்தது. எழுந்து கேட்ட எனக்குக் கண்கள் விரிந்தன. என்றோ, எப்போதோ நான் கொடுத்த PET preforms sample இப்போதுதான் அப்ரூவல் ஆகியதாம். அதற்கு நான் நடையாய்நடந்தது ஞாபகத்திற்குவந்தது. உடனடியாக வந்து பர்சேஸ் ஆர்டர் வாங்கிக்கொள்ளுமாறும், இன்னும் மூன்று மாதங்களுக்கு இடைவிடாத சப்ளை தேவை என்றும் சொன்னார்கள்.

என்னால் நம்பவேமுடியவில்லை. ஜெகனைப் பார்த்தேன். சிரித்தார். “யோசித்துப்பார்த்தால், அன்னை முறைகள் அனைத்தும் ப்ராக்டிகலாகப் பின்பற்றக்கூடியவையே. நாம் செய்வதில்லை. காரணம்.... நம் வாழ்க்கை, எண்ணம், நடத்தை எல்லாவற்றிலும் அன்னைக்குப் பிடிக்காத அத்தனைக் குணங்களும் இருப்பது நம் மனதிற்குத் தெரியும். இந்நிலையில்.... அன்னைக்கு மிகநெருங்கிவந்தால், சத்தியத்தை நிலைநாட்டுகிறேன் என்று அவர் செய்ய, அது நமக்கு எதிராகவோ.... பிடிக்காததாகவோ இருந்துவிட்டால்.... இந்த குயுக்தியால்தான், நம்மால் முடிந்த, விடை தெரிந்த விஷயத்திற்கு அன்னையிடம் செல்வதில்லை. நம்மால் முடியாது என்றபோதுதான் வருவோம். இப்போது பாருங்கள்.... ஒன்றிரண்டு முறைகளைப் பின்பற்றத் தொடங்கியதுமே அன்னைச் சூழல் வருகிறது.... வந்தவுடன் வியாபாரம் பலிக்கிறது.....”



மௌனமாக இருந்தேன். “எல்லாவற்றையும் பின்பற்ற ஆசையாகத்தான் இருக்கிறது..... ஆனால், நீங்களே சொல்லுங்கள், இன்றைய காலகட்டத்தில், அன்னை முறைகளையெல்லாம் பின்பற்ற முடியுமா..... மிளகாய் அரைத்து, தூக்கிச்சாப்பிட்டுவிடமாட்டார்களா?.....” என்றேன்.

“அது உங்கள் நம்பிக்கையைப்பொருத்தது. என்றாலும் கண்முன் தற்போது உள்ள ஓர் உதாரணம் காட்டமுடியும்”.

“என்ன அது?”....

“தற்போது இந்தியாவில் BPO எனப்படுபவை அடைந்த வளர்ச்சி எதிர்பாராதது, அளவில் அடங்காதது என்று தெரியுமல்லவா?”

“ஆமாம்”.

“அது எதனால்?”

“Knowledgeable labour at low cost”.

“இல்லை. அது ஒரு சிறுஉண்மையே. அப்படிப்பார்த்தால், நல்ல அறிவுடன், குறைந்த சம்பளத்தில் நடைபெறும் அனைத்துத் தொழில்களும் அப்படி வளரவில்லையே”.

“பின் எது?”

“யோசித்துப்பாருங்கள். இத்தகைய BPO இடங்களில் சுத்தம், ஒழுங்கு, நேரம்தவறாமை என்பது அடிப்படைத் தேவை. அதேபோல கிளைண்ட் சர்வீஸில், குறிப்பாகக் கால் சென்டர்களில் கஸ்டமரின் நோக்கில் அவரை அறிவது முக்கியம். நிதானம், பொறுமை தேவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. எல்லாவற்றிற்கும்மேலாகப் பேச்சு, எழுத்து, ஒப்பந்தம், அனைத்திலும் 100% உண்மைமட்டுமே. அடுத்தவர்க்குக் கேட்குமளவிற்கே பேச்சு என்பது முறை. Keep it short வார்த்தைகளைக் குறைத்து, புராசஸ்களை அதிகமாக்கு என்பது விதி. இப்படி அன்னையின் வழிமுறைகள் பல. ஏதோ ஓர் அயல்நாட்டுக் கம்பெனிக்காக, அதன் திருப்திக்காக, 100% பின்பற்றப்படுகிறது. ஒரு கட்டாயத்திற்காகப் பயந்து செய்யப்படுகிறது. ஆனால்.... அதற்கே அந்தத் தொழில், அது சம்பந்தமான தொழிலாளர்கள், மாநிலம், நாடு அனைத்தும் பெறும் சுபிட்சம் வரலாறு காணாதது”.

“இதை ‘அன்னைக்காக’ என்று செய்யமுடியாதா என்று யோசித்து என்னளவில் பின்பற்ற ஆரம்பித்தேன். நான் நினைத்த அளவு

கடினமானது ஒன்றும் இல்லை. உண்மையில்.... நான் விடமுடியாதவை என்று நினைத்தவையெல்லாம்... நான் விடப் பிரியப்படாதவை..... என்பது புரிந்ததும், அனைத்தும் எளிதாகிவிட்டது".

ஜெகன் பேச பேச, என்னை நினைத்து வெட்கமாக இருந்தது. இதுவரை நான், நான்தான்; என் உழைப்பு, என் திறமைதான்;.... என்று இருந்தனவெல்லாம் அபத்தமாகப்பட்டது. என்னுடைய திறமை, அறிவு அத்தனையையும் உபயோகப்படுத்தி வாழ்ந்ததில் இதுவரை சாதித்தது என்னஎன்று யோசித்தேன்.... பெரிய பூஜ்யம் கண்முன்நின்றது.

மனது இறுக்கமானது. இனி என்வழி எதுவும் தேவையில்லை. அன்னை வழியில்தான் இனியெல்லாம்.... மனது உறுதி எடுத்ததும், செயல்படுத்துவதில் ஒன்றும் சிரமம் இருக்கவில்லை. அதன்பிறகு ஒவ்வொரு நாளும் முன்னேற்றமாக அன்னை முறைகளின் எளிமையும், அதன் பெரும்பலனும் புரிய ஆரம்பித்தது.

ஒருநாள்..... விடியற்காலையில் ஜெகனின் போன். "இன்னும் என்ன தூக்கம். இனி தூங்கவே உமக்கு நேரம் இருக்கப்போவதில்லை" ஜோக் அடித்தார்.

ஒன்றும் புரியாமல், "என்ன விஷயம்?" என்றேன்.

"Economic Times பார்த்தீரா?"

"இன்னும் இல்லை".

"அடுத்த மாதம்முதல் வெள்ளை மற்றும் கலர் மினரல்வாட்டர் கேன்கள் தடைசெய்யப்படுகிறது. இனி transparent PETமட்டும்தான் உபயோகப்படுத்தமுடியும். எதிர்கால மார்க்கெட் ஆயிரம் கோடியாம். உன்னை இனி பிடிக்கமுடியாது....." அவர் பேசிக்கொண்டேபோக.....

அன்னை முறைகளே அன்னை என்பது புரிந்தது.

*முற்றும்*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**தெய்வமனம் நம்மை மற்ற அனைவரிலும் காண்கிறது. அதற்கு சத்தியஜீவியம் சித்தித்தால் அனைவரையும் நம்மில் காணும்.**





**The whole concentration will be shifted from below upwards and from without inwards.**

**மனிதவாழ்வின் மையம் கீழிருந்து மேலேயும்,**
**வெளியிலிருந்து உள்ளேயும் மாற்றப்படும்.**

- ✡ **இது புதுப்பரிணாமம் என்கிறார் பகவான்.**
- ✡ **இதுவரை பூமியில் நடந்தது உடலின் அடிப்படையில்.**
- ✡ **மனத்திற்கு உடல்என்பது மூளை. இது ஜடமானது, இதன் சிந்தனையும் ஜடம்.**
- ✡ **விஞ்ஞானம் அறிவுக்குரியதன்று, மூளைக்குரியது.**
- ✡ **உடலின் அடிப்படையில் நடந்த பரிணாமம் முடிந்து, இயற்கையின் அடிப்படையில் புதுப்பரிணாமம் எழவேண்டும். உடல் இயற்கையின் பகுதி. இயற்கை முழுமையானது.**
- ✡ **பகுதியான பரிணாமம், முழுமையான பரிணாமமாகவேண்டும்.**
- ✡ **அதற்கு மூளையைவிட்டகன்று, மனத்தை - புத்தியை - அடைய வேண்டும்.**
- ✡ **தற்சமயம் நம் வாழ்வின் மையம் வெளியில் - புறத்தில் - உள்ளது.**
- ✡ **அத்துடன் வாழ்வின் மற்றொரு மையம் ஜடமான உடலில் அமைந்துள்ளது.**
- ✡ **புதியபரிணாமம் ஏற்பட:**
  - ❀ **வாழ்வுமையம் உடலினின்று உள்ளத்துக்கு வருதல் அவசியம்.**
  - ❀ **அப்பொழுது புறத்தில் உள்ள மையம், அகத்தை வந்தடையும். உலகம் அகத்துள் தெரியும்.**
  - ❀ **மூளையைவிட்டு மனத்தை அடையவேண்டும்.**

❀ **மேல்மனத்தைவிட்டு உள்மனத்தை அடையவேண்டும்.**

✡ **நண்பர் உறவு மேலெழுந்தவாரியானது. குடும்பத்தார் உறவு ஆழ்ந்த உறவு.**

❀ **குடும்பத்து உறவு நட்பு தலைகீழே மாறியதுபோலாகும்.**

❀ **நட்பு உறவானால் இதுவரை தெரியாதது தெரியும்.**

❀ **இத்தனை நாட்கள் கேட்டுப்பெற்றது, இனி கேளாமல் பெற முடியும்.**

❀ **சந்தேகம் நம்பிக்கையாக மாறும்.**

❀ **வேண்டாததுஎன விலக்கியது அவசியமானதாகும்.**

❀ **இரகஸ்யமான செய்தியைத் தவறாது கூறுவோம்.**

❀ **இதுவரை இருண்டிருந்த உறவு ஒளிபெறும்.**

✡ **இம்மாற்றம் நம் அடிப்படையை உடலிலிருந்து மேலே எடுத்துச் செல்லும்.**

✡ **மேலிருந்து ஒளி, சக்தி பிரவாகமாக உள்ளே வரும்.**

✡ **பரிணாம வேகம் அதிகரிக்கும்.**

✡ **ஜடம் இனி அடிப்படையாக இருக்கமுடியாது.**

✡ **இருளான ஜடம் ஒளிமயமாக மாறும்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகத்தின் உண்மையான அங்கமாக ஏராளமான பேர் மாறிவிட்டனர். மொத்தத்தில் அவர்கள் சிறுபான்மையினரே. மீதி பேர் அனைவரும் சமூகக் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள். மனவளர்ச்சியால் தெளிவுபெற்றவர்கள் ஆயிரத்திலொருவர். பரிணாமவளர்ச்சியை ஏற்றுக்கொண்டவர் இருவர்மட்டுமே.



## அன்பர் கடிதம்

**ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!**

எங்கள் வாழ்வில் நாங்கள் அன்னையை வழிபட ஆரம்பித்ததிலிருந்து அன்னையின் அருள்மழையைத் தொடர்ந்து பெற்று வருகிறோம். இப்பவும் எனக்குச் சமீபத்தில் ஏற்பட்ட அனுபவத்தையும், அன்னையின் அருளினால் அது குணமானதைப்பற்றியும் கூற விரும்புகிறேன்.

14.10.03 அன்று நானும், என் தோழியும் எங்கள் குடும்ப நண்பருடைய 60ஆம் கல்யாணத்திற்குச் சித்தூர் சென்றோம். அங்கு மதியம் உணவு முடித்தபின், நான் பாத்ரூம் சென்று திரும்பும்பொழுது உள்ளே தவறி விழுந்துவிட்டேன். எங்கோ அடிபட்டுவிட்டது. ஆனால் எங்குஎன்று எனக்குத் தெரியவில்லை. என்னால் எழுந்திருக்கவும் முடியவில்லை. கதவில் இடித்து விழுந்ததால், வெளியில் எல்லோருக்கும் பெரிய சத்தம்கேட்டு கதவைத் தட்டினார்கள். கதவு உள்ளே தாழ்போட்டு இருந்ததால் வெளியிலிருந்து யாரும் உதவிக்கு உள்ளே வரமுடியவில்லை. நான் “Mother, Mother” என்று அழைத்தவுடன், நானே எழுந்து கதவை திறப்பதற்கு சக்திகொடுத்தார் அன்னை. திறந்தவுடன் என் தோழி, “என்ன ஆயிற்று?” என்று பதற்றத்துடன் வினவினாள்.

வழக்கமாக நான் வெளியில் கிளம்பும்முன் அன்னைக்கு நமஸ்காரம் செய்துவிட்டு புஷ்பப்பிரசாதம் எடுத்துச்செல்வேன். என் பர்ஸில் Mother புஷ்பமும், Mother photoஉம் இருந்தன. உடனே என் தோழி அவற்றை என் கைகளில் கொடுத்தாள். அப்போதுதான் எனக்குப் பின்புறத்தில், உட்காரும் இடத்தில் அடிபட்டுவிட்டது என்று தெரியவந்தது. என் தோழியும் அன்னை அன்பராக இருந்தமையால், உடனே புஷ்பத்தை அந்த இடத்தில் வைத்து, “ஓம் நமோ பகவதே Mother, Mother” என்று சொல்லிக்கொண்டே இருந்தோம். Mother's Graceஆல் நான் எழுந்து நடந்து, இருவரும் பஸ் ஏறி, சித்தூரிலிருந்து ராணிப்பேட்டை வந்து சேர்ந்தோம்.

வீட்டிற்கு வந்து பார்த்தபொழுதுதான் அடிபட்ட இடம் வீங்கி, சுமார் ¾ அடி நீளத்திற்கும், 4” அகலத்திற்கும் கருரத்தம் கட்டியிருந்தது தெரிய

வந்தது. உடனே என் தோழி, "Mother, Mother" என்று சொல்லிக்கொண்டே Iodex தடவி, வெந்நீர் ஒத்தடம் கொடுத்தாள்.

மாலையில் என் கணவரிடம் எல்லா விவரங்களையும் கூறினேன். அப்போது அவர் ஹாஸ்பிடல் போகச்சொன்னார். ஆனால் என் மனதில் அன்னையிடம் நம்பிக்கை இருப்பதினால், அன்னையின் அருளினால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொல்லிவிட்டு, தினமும் தியான மையத்திற்குச் சென்று Motherஇடம் pray செய்து புஷ்பப்பிரசாதத்தை அந்த இடத்தில் வைத்து "Mother, Mother" என்று சொல்லி மனதார வேண்டிக்கொண்டுவர நாளடைவில் அந்த அடிப்பட்ட இடம் நார்மலாகி, அடிபட்ட சுவடே தெரியாதபடி நன்கு ஆறிவிட்டது.

எல்லாம் அன்னையின் அருளினால்தான் நடந்தது. அன்னையின் அருளை என்னஎன்பது! அதை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. ஸ்ரீ அன்னைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கின்றேன். ஸ்ரீ அன்னைக்கு அநேககோடி நமஸ்காரங்கள்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் உணர்விலிருந்து விலகியதற்கு அடையாளம் ஒன்றுண்டு. நரம்பில் உணர்ச்சி தட்டுப்படாவிட்டால், மனம் விலகியதுஎனப் பொருள். உடலுக்கும், நரம்புக்கும், மனத்திற்கும் உணர்ச்சியுண்டு. உணர்விலிருந்து மனம் விலகுவதை, மனத்தைவிட்டு நாம் புத்தியை அடைகிறோம் என்று சொல்லலாம்.

***மனம் அழிந்தால் புத்தி புறப்படும்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# சீனுவாச இராமானுஜம்

மேதை (genius) இராமானுஜம் கேம்பிரிட்ஜில் ஆராய்ச்சிசெய்து, உடல்நலம் குன்றி, இந்தியா வந்து, சிறுவயதில் காலமானார். இவர் தாயார், இவரது ஜாதகத்தை ஜோஸ்யரிடம் காண்பித்தபொழுது அவர், “ஜாதகன் உலகப்பிரசித்திப்பெற்று, அகால மரணமடைவார். அல்லது வெறும் மனிதனாக நெடுநாளிருப்பார்” என்றார். இவர் எழுதிய theorems தேற்றங்கள் 4 நோட்டுகளில் உள்ளன. அவருக்குப் பின் கேம்பிரிட்ஜ் அவற்றை வெளியிட்டது. 750 பிரதிகள் அச்சிட்டனர். 250 விற்றன. மீதி இதுவரை விற்கவில்லை. இன்று Amazon கம்பனிமூலம் ஆர்டர்செய்தால், 1 நோட்டு $80க்குக் (ரூ.3500/-) கிடைக்கும். அவர் எழுதியவற்றுள் பெரும்பாலும் பயன்பட்டன. கம்ப்யூட்டர் வந்தபின் சில புதிய சாப்ட்வேருக்கு இதுவரைப் பயன்படாத அவரது theorems பயன்பட்டன. இனியும் பயன்படுத்தப் படாதவை ஏராளமாக உண்டு.

- ✡ **கணிதத்துறையில் படிப்போ, பட்டமோ, தீட்சண்யமோ உள்ளவர் அன்னை பக்தரானால், அவரது தியானத்தில் இதுவரை பயன்படாத theorems பயன்படும்வழி தெரியும்.**
- ✡ **இது மேதாவிலாசத்தின் அன்னை அம்சம்.**
- ✡ **அன்னை அருளுள் அனைத்தும் அடக்கமானாலும், அத்துறையில் உள்ளவர் பக்திக்கு இராமானுஜத்தின் இரகஸ்யங்கள் புலப்படும்.**

❀❀❀

# AGENDA

பவித்ரா என்ற பிரெஞ்சு சாதகர் ஆசிரமம் ஆரம்பிக்குமுன் வந்தவர். புத்தபிக்ஷுக்களைத் தேடி திபேத் போகும் வழியில் இங்கு வந்தார். தினமும் ஸ்ரீ அரவிந்தரைச் சந்தித்துப் பேசுவார். “இங்கேயே தங்கினால் யோகம் பலிக்கும்” என்று பகவான் கூறியதை ஏற்று, இறுதிவரை இங்கு இருந்தார். Sri Aurobindo or The Adventure of Consciousness என்ற நூலை Satprem வெளியிட்டபொழுது, “நான் இந்நூலிலிருந்து பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்” என்றார்.

**“1914இல் நான் இங்கு வந்தபொழுது நானறியாத யோக இரகஸ்யங்கள் இந்நூலில் ஏராளமாக உள்ளன”**

**என அன்னை கூறியுள்ளார்.**

Sri Aurobindo எழுதியவை யாருக்கும் விளங்கவில்லை என்பதால், அதன் முக்கியக் கருத்துகளை எளிமையாக எழுதும்படி அன்னை நெடுநாள் கேட்டுக்கொண்டதன்பேரில் சத்பிரேம் எழுதிய நூல் இது. வெளிநாடுகளிலிருந்து ஆசிரமம் வந்த எவரையும், எப்படி உங்களுக்கு ஆசிரமம் தெரியும் என்று கேட்டால், Sri Aurobindo or The Adventure of Consciousnessமூலம் தெரியும் என்பார்கள். இந்தச் செய்தியை அன்னை Agendaவில் கூறியுள்ளார்.

❀❀❀